
4348
119460

# உலகக் குடியேற்றங்கள் உருவான கதை

ஆ. இராஜகோபால்




ங்கா வெளியீடு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# உலகக் குடியேற்றங்கள் உருவான கதை

பொது சன நூலகம்
10 APR 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஆ. இராஜகோபால்

4348 CC

119460

119460 C.C

ஸ்ரீ லங்கா வெளியீடு,
காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

- முதலாம் பதிப்பு: ஜூலை 1982
- ஸ்ரீ லங்கா வெளியீடு
- அச்சுப் பதிவு: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.


அறிவியல் சமூகவியல் உண்மைகளை மாணவர்கள் உட்பட, யாவரும் தெரிந்தும் புரிந்தும் கொள்வதற்காக இந்நூல் ஆக்கப்பட்டது: ஏனைய நூல்கள்:

1. உங்களுக்குத் தெரியுமா?
2. ஏன்? எப்படி? எவரால்?
3. விண்வெளி உண்மைகள்.
4. தெரிந்து கொள்ளுங்கள்.
5. குறுங்கட்டுரைகள்-15.
6. சனநாயகம் என்றால் என்ன?
7. யுத்தங்கள் ஏன் ஏற்படுகின்றன?
8. உலகக் குடியேற்றங்கள் உருவான கதை.
9. அபிவிருத்தி என்றால் என்ன?

301

விலை: ரூ. 3-00


விற்பனையாளர்:

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.


C.C

# உலகக் குடியேற்றங்கள் உருவான கதை

உலகின் நிகழ்காலப் பிரச்சினைகளுள் பல குடியேற்ற வாதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. இப்பிரச்சினைகள் இன்று நேற்றல்ல கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக பல்வேறு நாடுகளிடையே வேரூன்றி வளர்ந்து வந்துள்ளன.

குடியேற்றவாதம் என்பது மனிதனால் ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டு வளர்க்கப்பட்டதொன்றன்று. மனித குல சமூகப் பொருளாதார வளர்ச்சிகளின் உந்து சக்திகளில் ஒன்றாகத் தானாகவே கிளைவிட்டதொன்றாகும். பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் தவிர்க்கமுடியாத தேவையாக அமைந்த தென்னாசிய நாடுகளுக்கான புதிய கடற் பாதைகளும், அறிவியல் மலர்ச்சிகளும், புதிய சிந்தனை விழிப்புகளும், கைத்தொழிற் புரட்சியின் விளைவான வளர்ச்சிகளும், மதப் பரம்பல் வேட்கையும் குடியேற்றவாதத்தை எதிர்பாராது ஏற்பட்ட விபத்தென தோற்றுவித்தன. இதனை ஜே. பி. கோல் என்பார் பின்வருமாறு விளக்குகின்றார்.

"ஐரோப்பிய நாடுகளிடையே புதிய புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்ட போட்டாபோட்டிகள், கண்டுபிடித்த நாடுகளை, கைப்பற்றிய நாடுகளாகக் கருதி தம்வயமாக்கும் நிலையை (Acquire Territories) தோற்றுவித்தன. குடியேற்றவாத நிலப் பரப்புகளின் எல்லை விரிவாக்கங்கள் செல்வமீட்டுவதைவிட, சுய

கௌரவப்பிரச்சனை காரணமாக (A matter of prestige as will as a source of wealth) ஏற்பட்டன. குடியேற்றவாத முறைகளும், அவற்றின் தன்மைகளும், நிர்வாக அமைப்புகளும் எல்லா விடயங்களிலும் ஒரே மாதிரியாகவோ, எல்லாக் காலங்களிலும் ஒத்த தன்மையினதாகவோ இருந்ததில்லை. இவை மாற்றமுற்றிருந்தன. இவற்றுடன் ஒவ்வொரு நாட்டிலும் மதப் பிரிவின் வளர்ச்சிப் போக்கும் இணைந்திருந்தது.''

குடியேற்றவாதத்தில் ஈடுபட்ட நாடுகளையும், அவற்றின் செயல்முறைகளையும் வரலாற்று ரீதியில் ஆராயும்பொழுது குடியேற்றவாதம் என்னும் சொற்றொடருக்குப் பதிலாக 'ஐரோப்பிய வாதம்' (Europeanization) அல்லது 'மேற்கத்தியவாதம்' (Westernization) என்று குறிப்பிடுவது சில அடிப்படை உண்மைகளைப் புலப்படுத்த உதவும். இவ்விரண்டிலும் ஐரோப்பியவாதம் மிகச் சிறந்ததாக அமையும். ஏனெனில் குடியேற்றங்களை உலகின் பல்வேறு பாகங்களிலும் நிறுவத் துடிப்புடன் நின்றவை ஐரோப்பிய நாடுகளே. கி. பி. 1775 — 83-ம் ஆண்டுகளில் நிகழ்ந்த அமெரிக்கச் சுதந்திரப் போரின் பின்னர் அமெரிக்கா புதிய நாடுகளைக் கைப்பற்ற முனைந்ததால் மேற்கத்தியவாதம் எனப்பட்டது. எவ்வாறாயினும் மேற்குலக நாடுகள் புவியின் பல்வேறு நாடுகளைக் கைப்பற்றித் தமது சொந்தமாக்கிக்கொண்டு அவற்றினைத் தமது நாட்டின் ஒரு பகுதியாகக் கருதி, தம் நாட்டு மக்களை அந்நாடுகளில் குடியேற்றி அவர்களால் நாட்டை நிர்வகிக்கச் செய்து, தமது கலாச்சார, சமூக உணர்வுகளை வேரூன்றச் செய்து, சமூக, அரசியற் பொருளாதார அமைப்புகளில் தம்மியல்புகளைப் புகுத்தி, கைப்பற்றிய நாடுகளின் தனித்துவத்தை மாற்றியமைத்தமையையே குடியேற்றவாதம் என்பர்.

குடியேற்றவாதத்தை மூன்று முக்கிய காரணிகள் உருவாக்கின எனப் புகழ் பெற்ற வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அவை:

1. வர்த்தகத் தரை மார்க்கம் தடைப்பட்டமை.
2. கல்வியின் மறுமலர்ச்சி
3. புதிய கடற்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமை.

(1) பதினைந்தாம் நூற்றாண்டு ஐரோப்பாவை பொறுத்தளவில் மிகவும் கஷ்டமான காலமாக (Critical Period) விளங்கியது. இக்காலத்தில் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட நிலவுடைமை சமுதாய அமைப்பின் மூலம் வர்த்தகத்தை முதன்மை

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



யாகக் கொண்ட புதிய நகர்ப்புற சமுதாயம் தோன்றலாயிற்று. இந்த வர்த்தக சமுதாயம் மேற்கைரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தில் முதலிடம் வகித்ததோடு அந்தந்த அரசியலிலும் அதிக செல்வாக்குக் கொண்டிருந்தது. சிறப்பாகப் போத்துக்கல், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளில் இவ்வர்த்தக சமூகம் உயர் நிலையிலிருந்தது. இச் சமூகம் தென்னாசிய நாடுகளில் கிடைக்கப்பெற்ற ஆடை, ஆபரணம், பீங்கான், மட்பாண்டம், வாசனைத் திரவியங்கள், சுகந்தப் பொருட்கள் (சந்தனம், அகில் போன்றன) இரத்தினங்கள், மயில் தோகைகள், முத்துக்கள் போன்றனவற்றை வாங்கிச் சென்று மேற்கைரோப்பிய நாடுகளில் விற்றுப் பெருஞ் செல்வமீட்டியது. இதனால் ஆசியப் பொருட்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும் கேள்வியிருந்தது. இதற்குக் காரணம் இப்பொருட்கள் அயனப் பகுதிகளுக்கே உரித்தானவை. மேற்குநாடுகளின் இடைவெப்பப் பகுதிகளில் கிடைக்கப்பெறாதவை. எனவே, இவ் வர்த்தகர்கள் இப் பொருட்களுக்கு வெப்பவலய ஆசிய நாடுகளையே நம்ப வேண்டியதாயிற்று.

அதே வேளையில் இன்னுமொரு உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டியதவசியமாகும். அதாவது அக்காலங்களில் ஐரோப்பிய நாடுகளைவிட, ஆசிய நாடுகளின் உற்பத்திப் பொருட்களில் தொழில் முறையியல் மேம்பட்டு, பொருட்கள் நுட்பமானவையாகவும், கலையழகு மிக்கனவாகவும் விளங்கின. எனவே ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் ஆசிய நாடுகள்மீது கவனமிருந்தது. இந்த நாடுகளிடையே வர்த்தகப் போக்குவரத்து தரை மார்க்கமாகவே விளங்கியது. ஐரோப்பியர் சின்னாசியா எனப்படும் துருக்கிப் பிரதேசத்தை தரைமார்க்கமாகக் கடந்து ஆசியாவை அடைந்தனர். துருக்கியரான இஸ்லாமியரும் வர்த்தகம் செய்பவரே. ஐரோப்பியரான கிறிஸ்தவர்கள் தம்மிடத்தைக் கடந்து சென்று வர்த்தகத்திலீடுபடுவதும், அவர்கள் வேறு மதத்தினராக இருப்பதும், தமது மதத்தைக் காப்பாற்ற வாளெடுத்துப் போர் செய்யலாம் என்ற மத நம்பிக்கையும் இஸ்லாமியருக்கும், கிறித்தவருக்குமிடையே போர் ஏற்படுத்தியது. கி. பி. 1453-ல் கிறித்தவர்கள் மதப்போரில் தோல்வியுற்றனர். கிறித்தவர்களின் மத்தியத்தானமான கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாக, ஐரோப்பியரின் வர்த்தகப் பாதையான தரைமார்க்கம் அவர்களுக்கு மூடப்பட்டது. துருக்கியரின் ஒட்டோமான் சாம்ராஜ்யம் (Ottoman Empire) தென்னாசிய வர்த்தகத்தில் திளைத்தது. வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட

விரும்பிய ஐரோப்பியர் புதிய வர்த்தக மார்க்கங்களைத் தேடத் தொடங்கினர்.

## கல்வியின் மறுமலர்ச்சி

(2) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானதும் கிறித்தவர்கள் வடமேற்கு நோக்கி ஐரோப்பாவின் கண்டமையப் பகுதிக்கு நகர்ந்தனர். இதுவரை காலமும் கொன்ஸ்தாந்திநோபிளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கிரேக்க, உரோம அறிவு நூல்களையும் ஐரோப்பியநாட்டு பாகங்கட்குக் கொண்டு சென்றனர். இதனால் ஐரோப்பாவில் கல்வியில் மறுமலர்ச்சியும், தேசிய விழிப்புணர்ச்சியும் தோன்றியது. அதுமட்டுமன்றி துருக்கியரால் வெளியேற்றப்பட்ட ஐரோப்பிய மக்களுக்கு அரசியல், சமயச் சகிப்பின்மையற்றிருந்ததால், புதிய கல்விச் சிந்தனைகள் தேசிய உணர்வினை (Nationhood) கொழுந்து விட்டெரியச் செய்தன. அத்துடன் அக்காலத்தில் இங்கிலாந்து, போத்துக்கல் போன்றனவே ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்தன. எனவே ஸ்பெயின் போன்ற நாடுகள் தம்மளவில் தம்மை உயர்த்திக் கொள்ளப் பாடுபட்டன. எனவே புதிய புதிய நூல்கள் எழலாயின. இக்காலமே அச்சு இயந்திர முறை தோன்றிய காலமாகும். அந்த நூல்கள் அறிவு சார்ந்தவையாக இருந்ததுடன், அந்த நாட்டு மக்களின் மொழியில் எழுந்த உன்னத இலக்கியங்களாகவும் விளங்கின. எனவே தேசிய உணர்வு கொண்ட நவீன சிந்தனையாளர் உருவாகினர். உதாரணமாக போலந்தில் நிக்கலஸ் கோபர் நிகஸ் (கி. பி. 1473-1543) இத்தாலியில் கலிலியோகலிலி (கி. பி. 1565-1642), ஜேர்மனியில் கெப்லர் (கி. பி. 1574-1630) இத்தாலியில் லியனார்டோடாவின்சி (கி. பி. 1452-1519) போன்றோரைக் கூறலாம். இவர்களைப் புதிய வாத்தக வகுப்பினர் வரவேற்றனர். புதிய எண்ணக் கருத்துக்கள் இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் பரவின. அண்டம் பற்றிய புதிய கருத்துக்கள், பழைய கோட்பாடுகளைத் தகர்த்தெறிந்தன. "உலகம் தட்டையானது. ஒரு இடத்திலிருந்து கடற் பிரயாணம் செய்தால், உலகின் அந்தத்தில், விழுந்து போவோம்" என்பன போன்ற தவறான கோட்பாடுகள் கல்வியின் மறுமலர்ச்சியாற் தவறென உணரப்பட்டன.

(3) இக்காலத்தில்தான் முதன்முதலாக 'புவி கோள வடிவினது' என்ற தத்துவம் உலகிற்கு எடுத்துக் கூறப்பட்டது. எனினும் உலகைச் சுற்றிவர ஏற்றதானதொரு கடற்பாதை கொண்டமைந்த புவிக்கோளம் உருவாக்கப்படவில்லை. முதலாவது புவிக்கோளம் 1492-ல் தான் அமைக்கப்பட்டது. புவி பற்றிய புதிய தத்துவமும், புதிய கடற்பாதைகளையும், புதிய நாடுகளையும் கண்டு பிடிப்பதற்குமான பேரவாவை கடலோடிகளிடத்து ஏற்படுத்தின. இவர்களுள் ஸ்பெயின் மன்னருக்காக கடற் பயணத்தை மேற்கொண்ட இத்தாலியிலுள்ள ஜெனோவாவில் பிறந்த கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் (கி. பி. 1451-1506) போத்துக்கல் நாட்டவரான வாஸ்கொடகாமா (கி. பி. 1460-1542) ஃபர்டினந்து மகலன் (கி. பி. 1480-1521) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.




கடற்பிரயாண யுகத்தின் முதல் மைல் கல் கிறிஸ்தோபர் கொலம்பஸ் எனலாம். இவர் இத்தாலியில் ஜெனோவா நகரில் கி. பி. 1451-ஆம் ஆண்டில் பிறந்தார். கொலம்பஸ் சிறு வயது முதலே கடற் பிரயாணத்தில் ஆர்வமுடையவராக இருந்தார். கடற் பிரயாணம் செய்பவர்களையும், மாலுமிகளையும், மாலுமிகளுக்கு வழிகாட்டும் படம் வரைந்து கொடுப்பவர்களையும் கொலம்பஸ் சிநேகிதம் பிடித்துக்கொண்டார். அவர்களிடமிருந்து உலகம் பற்றிய விபரங்களைக் கேட்டு அறிந்துகொண்டார். உலகம் தட்டையானதன்று; அது பெரிதும் உருண்டையாகவே இருக்க வேண்டும் என்று இவர் நம்பினர்.

கடைசியில் தந்தையின் அனுமதியுடன் கப்பல் ஒன்றில் பணியாளராகச் சேர்ந்து, மத்தியதரைக் கடல் துறைமுகங்களுக்குப் பிரயாணம் செய்தார். புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆசை இவருக்கு எழுந்தது. கொலம்பஸ், ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று, ஸ்பானிய மன்னன் பேர்டினன்ட், ஸ்பானிய அரசி இசெபெலா ஆகியோரின் உதவியைப் பெரு முயற்சியின் பின் பெற்றார். அவர்கள் கொலம்பஸ்சை ஒரு கப்பல் படைத் தலைவராக்கி, கடற் பிரயாணத்துக்கு மூன்று கப்பல்களையும் வேண்டியளவு பணத்தையும் கொடுத்தார்கள்.

கொலம்பஸ் தனது நாற்பத்தோராவது வயதில் இந்தியாவிற்கு மேற்குப் பக்கமாகச் சென்று கடற்பாதை காணும் பிரயாணத்தை மேற்கொண்டார். ஸ்பெயினில் பாலொஸ் என்ற துறைமுகத்தில் இருந்து கொலம்பஸ்சும் மாலுமிகளும் முதலில் அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள கனேரித் தீவுகளை அடைந்தனர். அங்கிருந்து மேற்குப் பக்கமாகக் கப்பல்களைச் செலுத்தினர்.

1492-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி அமெரிக்காவின் கரையோரத் தீவு ஒன்றில் கொலம்பஸ் கால் பதித்தார். இந்த நாடு இந்தியாதான் என கொலம்பஸ்சும் மாலுமிகளும் நம்பினர். தாம் கண்டுபிடித்த அந்த நாடு அமெரிக்காவின் ஒரு பகுதி என்பதை அவர்கள் அறியவில்லை. இந்திய நாடெனக் கொலம்பஸ் நம்பியதால்தான், இந்நாடுகளை, மேற்கு இந்தியத் தீவுகள் எனக் கூறுகின்றனர்.



கொலம்பசின் கடற் பிரயாணப் பாதை

மேற்கு இந்தியத் தீவு ஒன்றில் கால் பதித்த, கொலம்பஸ், அத்தீவில் ஸ்பானியக் கொடியை ஏற்றி, சன்சல்வடோர் என அத்தீவுக்குப் பெயரிட்டார். கொலம்பஸ் பயணம் செய்த கப்பலான 'சந்தாமரியா' இஸ்பானியோலா தீவிற்கு அருகில் உடைந்து போனது. அதனால் கொலம்பஸ் ஸ்பெயினிற்குத் திரும்பினார். திரும்பும்போது பல அதிசயப் பொருட்களை (தங்கம், பருத்தி, புதிய செடிகள், பறவைகள் என்பன) ஸ்பெயினிற்கு எடுத்துச் சென்றார். ஸ்பெயின் நாட்டில் அவருக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது.

கொலம்பஸ் மீண்டும் மூன்று தடவைகள், அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து பல புதிய தீவுகளைக் கண்டு பிடித்தார்.

கொலம்பஸின் கடற் பிரயாணத்தின் பின்பே அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடக்க ஏனைய கப்பல்கள் முன்வந்தன.




போத்துக்கல் மன்னன் கென்றி என்பான், இந்தியாவுக்குப் போகப் புதிய வழியொன்றைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தான். கொலம்பஸ் மேற்குத் திசையாக பிரயாணம் செய்து 'இந்தியா'வைக் கண்டு பிடித்தார் என்பதை அறிந்ததும் கிழக்குப் புறமாக இந்தியாவிற்குப் புதியதொரு பாதையைக் காண வேண்டும் என விரும்பினான். போத்துக்கேய மாலுமிகள் ஆபிரிக்கக் கரையோரமாக நன்னம்பிக்கை முனை வரை பயணம் செய்திருந்தார்கள்.

போத்துக்கல் மன்னன் இந்தியாவுக்குப் பாதை கண்டுபிடிக்குமாறு வாஸ்கொடகாமா என்பவரைத் தெரிந்தெடுத்தான். வாஸ்கொடகாமா போத்துக்கேயர்; இராணுவ வீரராக இருந்தவர்; திறமை மிகுந்த கப்பல் தலைவன் எனப் பெயர் பெற்றவர். 1497-ஆம் ஆண்டு வாஸ்கொடகாமாவும் மாலுமிகளும் இந்தியாவை நோக்கி ஆபிரிக்கக் கரையோரமாகப் புறப்பட்டனர். வெர்ட் முனையை முதலில் அடைந்தனர். அங்கிருந்து தென் கிழக்குத் திசையில் சென்ற வாஸ்கொடகாமா நான்கு மாதங்கள் பிரயாணம் செய்து நன்னம்பிக்கைமுனையை அடைந்தார்.


வாஸ்கொடகாமா

நன்னம்பிக்கைமுனையைச் சுற்றிக்கொண்டு கிழக்கு ஆபிரிக்கக் கரையோரமாக ஒரு சிறிய விரிகுடாவை அடைந்தார். அந்த இடத்திற்கு நேட்டால் எனப் பெயரிட்டார். நேட்டாலில் இருந்து

புறப்பட்டு, மொசாம்பிக் என்ற தீவை அடைந்தார்; அத்தீவில் வாழ்ந்த அராபிய மாலுமிகளில் ஒருவனைத் தனது கப்பலில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவனது உதவியுடன் மேலும் நான்கு மாதங்கள் வடகிழக்குப் புறமாக பிரயாணம் செய்து இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டை என்னும் துறைமுகத்தை வந்தடைந்தார். கள்ளிக்கோட்டை அரசனுக்கு விலை மிகுந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்திய மக்களுடன் வியாபாரம் செய்ய அனுமதி பெற்றார். சில காலத்தின் பின் அராபிய வியாபாரிகளின் தூண்டுதலால் கள்ளிக்கோட்டை மன்னன் வாஸ்கொடகாமாவையும் அவனது ஆட்களையும் கைப் பற்றிக் கொலை செய்ய முயன்றான். அதனால் வாஸ்கொடகாமா கப்பல்களில் ஏறி போத்துக்கல்லுக்கே திரும்பினார். போத்துக்கல் மன்னன் இவரை வரவேற்று பிரபுவாக்கினான்.




வாஸ்கொடகாமாவின் கடற்பிரயாணப் பாதை

மூன்றாண்டுகளின் பின் வாஸ்கொடகாமா மறுபடியும் இந்தியாவிற்கு வந்தார்; கள்ளிக்கோட்டையை அடைந்ததும் பழிவாங்கும் நோக்கோடு பீரங்கிகளால் கள்ளிக்கோட்டை நகரத்தைச்



சுட்டார். பின் கொச்சித் துறைமுகத்திற்குச் சென்று அங்குள்ள மக்களுடன் வர்த்தகம் செய்தார்; கோவாவில் நிலையான ஒரு போத்துக்கேய குடியேற்றத்தை அமைத்தார்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு முதன்முதலில் கடல் வழி கண்டுபிடித்த பெருமை வாஸ்கொடகாமாவிற்கே உரியது.


'பூமி கோள வடிவமானது; பூமியில் ஓர் இடத்திலிருந்து ஒரு திசையில் புறப்பட்டால் அந்த இடத்தை மறு எதிர்த்திசையில் வந்து அடையலாம்' எனும் உண்மைகளை நிரூபித்த பெருமை பேர்டினன்ட் மகலன் என்பவனுக்கே உரியது. உலகத்தை முதன் முதல் சுற்றிக் கப்பலில் யாத்திரை செய்தவர் மகலனாவார். மகலன் 1480ஆம் ஆண்டு போத்துக்கல் நாட்டில் பிறந்தார்.



மகலன்

இந்தியாவிற்கு மேற்குப் பக்கமாகக் குறுகிய கடற்பாதையொன்றைக் கண்டுபிடிக்க ஸ்பானிய மன்னன் ஐந்து கப்பல்களையும், 250 மாலுமிகளையும் இவருக்குக் கொடுத்து கடற்பிரயாணத்திற்கு உதவினான்.

சிறிய பாய்மரக் கப்பல்களில் மகலன் தன் பயணத்தைத் தொடங்கினார்; காற்றை நம்பிய இக் கப்பல்கள் இரண்டு மாதங்களில் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து தென்னமெரிக்காவின் தென்முனைக் கரையை அடைந்தன. இதற்கிடையில் ஐந்து கப்பல்களில் ஒன்று தென்னமெரிக்கக்கரையில் பாறையில் மோதி உடைவுற்றது; மகலன் தொடுகடல் ஊடாக இவரது கப்பல்கள் பசுபிக் சமுத்திரத்தில் பிரவேசித்தன; மகலன் தொடுகடல் இவரின் நினைவாகவே இப்பெயரினைப் பெற்றது. மகலன் பசுபிக் சமுத்திரத்தில் தொடர்ந்து பயணம் செய்தார். இறுதியில் பிலிப்பைன் தீவுகளை அடைந்தார்.






மகலனும் அவரது ஆட்களும் இத் தீவுகளில் சில நாட்கள் தங்கி ஓய்வெடுக்க விரும்பினர். இத் தீவுகளில் வாழ்ந்த சுதேச மக்கள் வெள்ளையர்களை விரும்பவில்லை. மகலன் அவர்களுடன் நட்பாக இருக்க எவ்வளவோ முயன்றும் இயலாது போயிற்று. மகலனின் ஆட்களுக்கும் சுதேசிகளுக்கும் இடையே ஏற்பட்ட போரில், மகலன் தோல்வியுற்றூர். விஷ அம்பு தாக்கி மரணமடைந்தார். ஆனுல், இவரது எஞ்சிய மாலுமிகள் விக்டோரியா என்ற கப்பலில் ஏறி, மேற்குப் பக்கமாகத் தொடர்ந்து பிரயாணம் செய்தார்கள். இந்து சமுத்திரத்தில் பிரவேசித்து, தென் இந்தியாவைச் சுற்றிக்கொண்டு ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகப் பயணம் செய்து, இறுதியில் ஸ்பெயினை அடைந்தனர்.

உலகம் உருண்டையானது என்பதை உலகத்தை முதலில் கப்பலில் சுற்றி வந்து மெய்ப்பித்தவர்கள் மகலனும் அவனது மாலுமிகளுமேயாவர்.

எனவே இம்மூன்று பிரதான காரணங்களே குடியேற்றவாதத்திற்கு அடிப்படையாக அமைந்தன. இதற்குத் துணைக் காரணிகளாக ஐரோப்பிய நாடுகளில் புதிதாக உருவாக்கப்பட்ட பீரங்கி, பிஸ்டல், மஸ்கெட் போன்ற வெடிமருந்துப் போர் ஆயுதங்களும், கடற் பயணத்திற்குரிய கப்பல் கட்டும் கலையும் காந்த திசையறிகருவியும் விளங்கின. ஆனுல் ஐரோப்பியருக்கு முன்பதாகவே கிழக்காசியாவில் அச்சு, வெடிமருந்து, காந்தக் கருவி என்பன உபயோகத்திலிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

குடியேற்றவாத வளர்ச்சிப்போக்கில் பதினைந்தாம், பதினூறும் நூற்றூண்டுகளில் முதன் முதலாக போர்த்துக்கல், ஸ்பெயின், ருஷியா, இங்கிலாந்து, பிரான்ஸ் என்பனவும், பதினேழாம் நூற்றூண்டில் ஒல்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம் என்பனவும், பத்தொன்பதாம் நூற்றூண்டில் டென்மார்க், நோர்வே என்பனவும் முக்கிய இடம் வகித்திருந்தன.

பதினூறும் நூற்றூண்டில் போத்துக்கேயர் பிறேசில், இந்தியாவின் மேற்குக்கரை, ஆபிரிக்க மேற்குக்கரை, கிழக்கிந்திய தீவுகளையும், ஸ்பானியர் மத்திய அமெரிக்கா, தென்னமெரிக்கா, கியூபா கிஸ்பானியோலா நாடுகளையும், ஒல்லாந்தர் வட அமெரிக்கா, மேற்கிந்திய தீவுகளையும், ஆபிரிக்காவின் சில பாகங்களையும் கைப்பற்றியிருந்தனர். 'சார் மன்னரின் ருஷிய' காலத்தில் இருந்த மன்னர்கள் தம்மையும் ஐரோப்பியராகவே கருதி, ஏகாதிபத்தி

யத்தையும், குடியேற்றவாதத்தையும் போற்ற எண்ணித் தமது எல்லையை ஆசியாவின் வடமுனைவு வரையும் விரித்துச் சென்றனர். ஆனால் புகழ் பெற்ற ஜெங்கிஸ்கான் சாம்ராஜ்யத்தில் சீனா இருந்ததால் ருஷியரால் கைப்பற்றமுடியவில்லை. எனினும் சார் மன்னர்கள் எஸ்கிமோவரின் ஒரே வாழிடமாக இருந்த வடபகுதியையும் கைப்பற்றினர். அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்று இன்று அழைக்கப்படும் நாடுகளையும் ஆபிரிக்காவின் கொங்கோ, இந்தியா, சீனா போன்ற நாடுகளையும் ஆங்கிலேயர் தம் வசமாக்கினர். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்' கொண்ட வல்லரசாக இங்கிலாந்து விளங்கியது;

## ஐரோப்பிய குடியேற்ற நாடுகள்

உலகத்தின் பல பாகங்களில் இன்று மேற்குநாடுகளின் நாகரீகம் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம், ஐரோப்பியர் அப்பாகங்களில் குடியேறியதும் அப்பாகங்களைத் தமது குடியேற்ற நாடுகளாக வைத்திருந்ததும் ஆகும். 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் கீழைத் தேசங்களுடன் வியாபாரத் தொடர்பினைக் கொள்ள விரும்பி, ஐரோப்பியநாட்டு மாலுமிகள் மேற்கொண்ட கடற் பிரயாணங்கள் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க உதவின. திசையறிகருவியின் கண்டுபிடிப்பும், கப்பல் கட்டுந் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியும் பெருங்கடற் பயணங்களைத் துணிச்சலுடன் மேற்கொள்ள உதவின. இதன் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகளை ஐரோப்பிய நாடுகள் தத்தமது குடியேற்ற நாடுகளாக உரிமை கொண்டாடின. அவரவர் கண்டுபிடித்த இடங்களில் குடியேற்றங்களை அமைக்க ஐரோப்பியர் முற்பட்டனர்; வட அமெரிக்கா, தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, கீழைத் தேசங்கள் என்பனவற்றில் ஐரோப்பிய குடியேற்றங்கள் ஏற்பட்டதோடு, அவர்களின் ஆதிக்கத்துக்கும் உட்பட்டன.

குடியேற்ற நாடுகளை உருவாக்கும் முயற்சியில் முதன் முதல் ஈடுபட்ட நாடுகள் போர்த்துக்கல்லும், ஸ்பெயினுமாகும்; இந்நாடுகளைத் தொடர்ந்து ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி முதலான நாடுகள் குடியேற்ற நாடுகளை உருவாக்கும் முயற்சியில் போட்டியிட்டு இறங்கின; இந்நாடுகள் யாவற்றிலும் மன்னராட்சியே நடைபெற்று வந்தது. நாட்டில் அமைதி நிலவ முடியாட்சியே சிறந்ததெனமக்கள் நம்பினர். இந்நாடுகள் தமது ஆதிக்கத்தை மேலும் விரிவுபடுத்த விரும்பி, அயல் நாடுகளுட

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



னும், ஒன்றுடன் ஒன்றும் போர்களில் ஈடுபட்டன: பிரான்ஸ், ருஷியா: ஆஸ்திரியா, பிரித்தானியா, ஜேர்மனி என்பன காலத்துக்குக் காலம் ஏகாதிபத்திய வல்லரசுகளாக விளங்கின.




வட அமெரிக்க நாடுகள்



4348 CC
119460

## அமெரிக்காக்களில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள்


பதினைந்தாம் நூற்றுண்டின் முடிவுவரை ஆசியா, ஐரோப் பாக் கண்டங்களை அடுத்து அமெரிக்காக் கண்டங்கள் அமைந்




தென் அமெரிக்காவின் நாடுகள்



துள்ளன என்ற உண்மை ஐரோ - ஆசிய நாடுகளுக்குத் தெரிந் திருக்கவில்லை. அமெரிக்காவில் முதன் முதல் கால் பதித்த ஐரோப்பியன் கொலம்பஸ் ஆவான்; 1492-ம் ஆண்டு, கீழைத் தேசங்களுக்கு மேற்குப் பக்கமாக கடற்பாதை ஒன்றைக் கண்டு பிடிப்பதற்காகப் புறப்பட்ட கொலம்பஸ், மேற்கிந்திய தீவுகளில் ஒன்ருன பகாமாத் தீவினை அடைந்த வரலாற்றை நாம் ஏற் கனவே படித்துள்ளோம்; கொலம்பஸ் தான் கண்டுபிடித்த பிரதேசம் அமெரிக்காக் கண்டம் என்ற உண்மையை உணரா மலேயே மத்திய அமெரிக்கா, வெனெசுவெலா, மேற்கிந்திய




1750இல் அமெரிக்காக் கண்டங்களில் ஐரோப்பிய குடியேற்றங்கள்

தீவுகள் என்பனவற்றைக் கண்டுபிடித்தான்; இவனைத் தொடர்ந்து 1497-இல் ஜோன்கபேட் என்பவன் வட அமெரிக்கக் கரையோரங்களைக் கண்டுபிடித்தான். 1500-இல் கேப்ரோல் என்ற போர்த்துக்கேயன், தென்னமெரிக்காவிலுள்ள பிறேசில் நாட்டைக் கண்டுபிடித்தான். அதே ஆண்டு அமெரிக்கோ வெஸ்புச்சி என்ற இத்தாலியன் அமெரிக்காக் கண்டத்திற்கு ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொண்டதோடு, 'புதிய உலகம்' என்ெருரு நூலையும் வெளியிட்டான்; இதன் பயனாக, 16-ம் நூற்ருண்டில் ஐரோப்பிய நாடுகள் பலவும் அமெரிக்காக் கண்டங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றன. ஸ்பானியர், ஆங்கிலேயர், பிரான்சியர், போர்த்துக்கேயர் ஆகியோர் அமெரிக்காக் கண்டங்களில் பிரதேசங்களைக் கைப்பற்ற முயன்றனர்.

புளோரிடா, மெக்சிக்கோ, பேரு, சில்லி, ஆசென்தீனு, கொலம்பியா முதலான அமெரிக்க நாடுகள் ஸ்பானியருடைய குடியேற்ற நாடுகளாக மாறின. பிறேசில் போர்த்துக்கேயரின் குடியேற்ற நாடானது. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய பகுதி (லூசியானு பகுதி)யும், கனடாவின் தென் பகுதியும் பிரான்சியரின் குடியேற்ற நாடுகளாக மாறின. ஆங்கிலக் குடியேற்றங்கள் ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குக் கரையோர நாடுகளிலும், கட்சன் வளைகுடாப் பாகங்களிலும் உருவாகின. பிரான்சும், இங்கிலாந்தும் அமெரிக்காக் கண்டங்களில் குடியேற்றங்களை அமைக்கத் தொடங்கியதும், ஸ்பெயினதும் போர்த்துக்கல்லினதும் ஏகபோக ஆதிக்கம் குன்றியது.

புதிய கண்டங்களில் கிடைத்த பொன், வைரம் முதலான இயற்கை வளங்கள் ஐரோப்பிய நாடுகளை, இக்கண்டங்களில் குடியேற்றங்களை அமைக்கத் தூண்டின. போர்த்துக்கேயர் பிறேசிலிலிருந்து தங்கம், வைரம் என்பனவற்றைப் பெருமளவில் போர்த்துக்கல்லிற்கு எடுத்துச் சென்றனர். ஆங்கிலேயர் வட அமெரிக்காவில் முதலமைத்த குடியேற்றம் வேர்ஜீனியாவாகும். இங்கு புகையிலைத் தோட்டங்களை, ஆபிரிக்க அடிமைகளின் உதவியுடன் ஆரம்பித்தனர். 17-ம் நூற்ருண்டிற்குப் பின் புதிய கண்டங்களில் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளே அதிகளவில் உருவாகின: நியூ பவுண்லாந்து, ரோட் தீவு, நியூ இங்கிலாந்து, பகாமாத் தீவுகள், மேரிலாந்து, யமேக்கா, கரோலினு, கயானு என்பன ஆங்கிலக் குடியேற்றங்களாகின.

புதிய கண்டங்களில் ஆங்கிலேயக் குடியேற்றங்களே சிறப்பாக அமைந்தன; ஏனைய நாடுகளின் குடியேற்றங்கள், குடியேற்ற




நாடுகளிலுள்ள வளத்தைச் சூறையாடித் தாய் நாட்டிற்கு எடுத்துச் செல்வதாகவும், ஆங்கிலேயரின் குடியேற்றங்கள், உண்மையாகவே குடியேறி, குடியேற்ற நாடுகளின் வளத்தைப் பெருக்குவதாகவும் அமைந்தது. ஆங்கிலேயர் குடியேறிய நாடுகளில் பயிர்ச் செய்கையிலீடுபட்டார்கள். தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அடிமைகளை அமர்த்திக் கொண்டனர். இதனுல் அடிமை வியாபாரம் பெருகியது.

அமெரிக்காக் கண்டங்களில் ஆதிக்கம் பெற ஒல்லாந்தர் முயன்றனர். 17-ம் நூற்ருண்டில், மேற்கிந்திய தீவுகள், கட்சன் நதிப் பள்ளத்தாக்கு, கயானு என்பன ஒல்லாந்தர் வசமிருந்தன ஆனுல், இந்நாடுகளை ஒல்லாந்தரால் பாதுகாக்க முடியவில்லை. ஒல்லாந்தர் இந்நாடுகளைத் தமது குடியேற்ற நாடுகளாகக் கருதாது, வியாபாரத் தலங்களாகக் கருதியதாலேயே, இவற்றை ஆங்கிலேயரிடம் இழக்க நேர்ந்தது.

## அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றமை

அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயருக்கும் பிரித்தானிய ஆங்கிலேயருக்கும் இடையே 18-ம் நூற்ருண்டில் அமெரிக்க சுதந்திரப் போர் ஒன்று ஏற்பட்டது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பிரித்தானிய அரசாங்கம், குடியேற்ற நாட்டின்




ஐக்கிய அமெரிக்க அரசுகள்

119460

அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் அடிக்கடி தலையீட்டு வந்தது. குடியேற்ற நாடுகள் சுதந்திரமாக ஒரு முடிவினை எடுப்பதற்குப் பிரித்தானிய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. இந்நாடுகள் தமது உற்பத்திப் பொருட்களைத் தம் விருப்பம்போல வர்த்தகம் செய்யவும் பிரித்தானியா அனுமதிக்கவில்லை. அமெரிக்க ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் தமது நாட்டின் நலனுக்காக ஆக்கப்பட்டவை எனப் பிரித்தானியா எண்ணி நடந்துகொண்டதால், குடியேற்ற நாடுகள் மனக் கசப்படைந்தன. அதனால், ஆங்கிலக் குடியேற்ற நாடுகளுக்கும் பிரித்தானியாவிற்கும் இடையில் போர் மூண்டது. ஜோர்ஜ் வாஷிங்டன் என்பவர் குடியேற்ற நாடுகளுக்குத் தலைமை வகித்தார். ஆங்கிலக் குடியேற்ற நாடுகளுக்கு, அமெரிக்காவிலிருந்த ஏனைய ஐரோப்பிய குடியேற்ற நாடுகளும் உதவி புரிந்தன. அதனால் பிரித்தானியா தோல்வியுற்றது. 1783-ம் ஆண்டு 'ஐக்கிய அமெரிக்க நாடுகள்' என்ற சுதந்திர நாடு உருவானது. கூட்டாட்சி அமைப்பினதான அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டது. 'அமெரிக்கர்' என்ற ஒருமைப்பாடும் தேசிய உணர்ச்சியும் தோன்றியது. ஜோர்ஜ் வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அதனையடுத்துக் கனடாவும் தன்னைச் சுதந்திர அரசாகப் பிரகடனப்படுத்திக்கொண்டது.

தென்னமெரிக்காவில் போர்த்துக்கேயரும், ஸ்பானியர்களும் தங்களது குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தியிருந்தார்கள். 19-ம் நூற்றாண்டில் தென்னமெரிக்க நாடுகளில் சுதந்திர இயக்கம் உருவானது. தாய் நாடுகள் குடியேற்ற நாடுகள் மீது செலுத்திய அதிக கட்டுப்பாடுகள் இந்நாடுகளைச் சுதந்திரம் கோரி புரட்சி நடாத்தக் காரணமாக அமைந்தன. ஸ்பானிய அமெரிக்க நாடுகள் தமது சுதந்திர இயக்கத்தில் வெற்றி கண்டன. குவாட்டமாலா, எல்சல்வடோர், நிக்ராகுவா, கொண்டுறஸ், கோஸ்ராறிக்கா, மெக்சிக்கோ, கியூபா, பனாமா, கொலம்பியா, பேரு, சில்லி, பொலீவியா, ஆசென்தீனா முதலான சுதந்திர நாடுகள் உருவாகின. பிறேசில் நாடும் இதனைத் தொடர்ந்து 1821-இல் போர்த்துக்கல்லின் குடியேற்ற நாடாக இருந்து சுதந்திரம் பெற்றது.

## ஆபிரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகள்

ஆபிரிக்காவை 'இருண்ட கண்டம்' என்று கூறுவர். 19-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதிவரை அக்கண்டத்தின் பெரும் பகுதி பற்றி வெளியுலகம் அறிந்திருக்கவில்லை. 15-ம் நூற்றாண்டில் ஆபி



ரிக்காக் கண்டத்தில் ஐரோப்பியர்கள் பலர் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டனர். மத்தியதரைக் கடலைச் சார்ந்த வட ஆபிரிக்கப் பகுதியில் முஸ்லீம்கள் குடியேறியிருந்தனர். இந்தியாவிற்குக் கடல்வழி காணும் முயற்சியில் ஈடுபட்ட போர்த்துக்கேயர், ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகக் கடற் பிரயாணம் செய்தனர். 1488ஆம் ஆண்டு பார்த்தலோமியோடயஸ் என்ற போர்த்துக்கேயக் கடற்பிரயாணி ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகப் பிரயாணம் செய்து நன்னம்பிக்கை முனையை அடைந்தான். வாஸ்கொடகாமா என்பவன் நன்னம்பிக்கை முனையைக் கடந்து, இந்தியாவை வந்தடைந்தான். இதன் பின் போர்த்துக்கேயர் கினி, அங்கோலா, மொசாம்பிக் முதலிய கரையோரப் பகுதிகளில் வியாபாரத் தலங்களை அமைத்துக்கொண்டனர். அத்தோடு ஆபிரிக்கா முழுவதற்கும் தாமே உரிமை எனப் போர்த்துக்கல் உரிமை கொண்டாடியது. எனினும், ஆபிரிக்கா முழுவதையும் கட்டிக்காக்கின்ற பலம் போர்த்துக்கல்லிற்கில்லை. அதனால் ஏனைய ஐரோப்பிய நாடுகள் தமது வியாபாரத் தலங்களை ஆபிரிக்காவில் அமைக்க முற்பட்டன. ஆபிரிக்காவில் பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், ஜேர்மனி, பிரித்தானியா, இத்தாலி, பெல்ஜியம் முதலான ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை அமைக்க விரும்பியமைக்குச் சில காரணங்களுள்ளன. அவை:


1. ஐரோப்பாவில் புதிதாக வளர்ச்சிபெற்ற நாடுகள் தமது பெருமையை உயர்த்துவதற்காகக் குடியேற்றநாடுகளை உருவாக்க விரும்பின. ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம் என்பன இவ்வகையின.

2. தொழிற்புரட்சி காரணமாக ஐரோப்பாவில் உருவான கைத்தொழிற் பொருட்களுக்குப் புதிய சந்தைகள் தேவைப்பட்டன.

3. ஆபிரிக்காவில் கைத்தொழில்களுக்குத் தேவையான உலோகப் பொருட்களும், கனிப் பொருட்களும் ஏராளமாக இருப்பதால் அவற்றைப் பெறவேண்டிக் குடியேற்றங்களை அமைத்தன.

4. அடிமை வியாபாரம் இக்காலகட்டத்தில் வளரத் தொடங்கியிருந்தது. இது மிகவும் இலாபகரமான தொழிலாக இருந்ததால் ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்காவில் கவனம் செலுத்தின.

19-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நில ஆராய்ச்சியாளர்கள் பலர், ஆபிரிக்கக் கண்டத்தின் உட்பகுதிகளுக்குப் பயணங்களை மேற்கொண்டு, வெளியுலகிற்கு உண்மைகளைத் தெளிவுபடுத்தினர். புரூஸ், மங்கோபார்க், பார்த், லிவிங்ஸ்டன், ஸ்ரான்லி போன்றோர் இத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அதனால் ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்காவைப் பிடித்துப் பிரித்துக் கொள்ளப் பலத்த போட்டியிட்டன. பிரான்சும், பிரித்தானியாவுமே முதலில் ஆபிரிக்காவில் நாடுகளைப் பிடிக்க முயன்றன. அவற்றைத் தொடர்ந்து ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஸ்பெயின் என்பனவும் முயன்றன.





1914இல் ஆபிரிக்கா

சகாராப் பாலைநிலத்தில் மேற்கு ஆபிரிக்காவின் பெரும்பகுதி பிரான்சியரின் வசமானது. மடகஸ்கார், மொரோக்கோ, அல்ஜீரியா, நைகர், சாட், சோமாலிலாந்து என்பன பிரான்சியக் குடி



யேற்றங்களாக அமைந்தன. ஸ்பானியர் தமது குடியேற்றங்களை ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரத்தில் ஸ்பானிய சகாரா (ரியோடி ஓரோ) விலும் ஸ்பானியகினியிலும் அமைத்துக் கொண்டனர். ஆபிரிக்காவில் காமரூபன், தென்மேற்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, ரோகோலாந்து என்பன ஜேர்மனியக் குடியேற்ற நாடுகளாக உருவாகின. கம்பியா, சிராலியோன், கோல்ட் கோஸ்ற், நைஜீரியா, பொத்ஸ்வான றொடீசியா, தென்னாபிரிக்கா, உகண்டா, கெனியா, எகிப்து, சூடான், எரிட்ரியா, பிரித்தானிய சோமாலிலாந்து என்பன இத்தாலியக் குடியேற்ற




ஆபிரிக்காவின் நிலயமும், இன்றைய நாடுகளும்

நாடுகளாகவும் பெல்ஜியன் கொங்கோ பெல்ஜியத்தின் குடியேற்ற நாடாகவும் உருவாகினு. 1914-ஆம் ஆண்டு அபிசீனியாவும் லைபீரியாவும் மட்டுமே சுதேசி நாடுகளாக விளங்கின.

## ஆபிரிக்க சுதந்திர நாடுகள்

இருபதாம் நூற்றுண்டில் ஆபிரிக்காவில் தேசிய உணர்ச்சி தோன்றியது. ஐரோப்பியரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகள் சுதந்திரவெறி அடைந்தன. ஐரோப்பிய நாடுகள் தமக்கு இழைத்த கொடுமைகளேயும், அவர்களால் தமது நாட்டின் செல்வங்கள் சுரண்டப்பட்டதையும் இந்நாடுகள் உணர்ந்தன, அதனுல், சுதந்திர இயக்கங்கள் ஆபிரிக்க நாடுகளில் உருவாகின.

முதலில் இத்தாலியின் ஆபிரிக்க ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. 1948-ல் எதியோப்பியா சுதந்திரநாடாக அமைக்கப்பட்டது. எரிட்ரியா இந்நாட்டுடன் சேர்க்கப்பட்டது. 1949-இல் லிபியா (திரிப்போலி) சுதந்திர நாடானது. 1953-ல் எகிப்து ஐக்கிய அரபுக் குடியரசானது. 1956-ல் சூடான் சுதந்திரமடைந்தது. பிரான்ஸ் அல்ஜீரியாவைக் கைவிட விரும்பவில்லே. 1954-இல் நிகழ்ந்த போரில் அல்ஜீரியா வெற்றி கண்டு, சுதந்திரம் பெற்றது. இதனேத் தொடர்ந்து கானு (கோல்ட் கோஸ்ற்), கொங்கோ, நைஜீரியா முதலான நாடுகள் சுதந்திர நாடுகளாக மாறின.

ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை இலகுவில் இழக்க விரும்பவில்லே; குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டது; ஆங்கிலேயரின் ஆதிக்க வெறியும் வெள்ளேயர் கறுப்பர் என்ற நிறவெறியும் ஆபிரிக்க ஆங்கிலக் குடியேற்ற நாடுகளில் தீவிர இயக்கங்களேத் தோற்றுவித்துள்ளன. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலே பெறுவதற்காக இந்நாடுகள் கம்யூனிஸ நாடுகளின் உதவியை நாடுகின்றன, இதன் விளேவாகவே றெடீசியக் குடியரசு 1967-ஆம் ஆண்டு உருவானது. இன்றும் ஆபிரிக்காவின் சுதந்திரப் போர் ஓயவில்லே. ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து தமது சுதந்திரத்தை மீட்பதற்காக இந்நாடுகள் தொடர்ந்து போராடி வருகின்றன.



## ஆபிரிக்காவின் சுதந்திர நாடுகள்

(அவை சுதந்திரம் பெற்ற ஆண்டு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.)

| | நாடு | தலைநகர் |
|---|---|---|
| 1. | ஐக்கிய அரபுக் குடியரசு (எகிப்து) | — கெய்ரோ (1953) |
| 2. | லிபியா | — ரிப்போலி (1951) |
| 3. | ரியூனிசியா | — ரியூனிஸ் (1956) |
| 4. | அல்ஜீரியா | — அல்ஜியேஸ் (1962) |
| 5. | மொரோக்கோ | — கசாபிளாங்கா (1956) |
| 6. | செனிகல் | — டாக்கா (1960) |
| 7. | மாலி | — பாமாகோ (1960) |
| 8. | கினியா | — கஞறிக் (1958) |
| 9. | சிராலியோன் | — பிறீரவுண் (1961) |
| 10. | லைபீரியா | — மன்ரோவியா (1947) |
| 11. | ஐவரிகோஸ்ற் | — அபிட்யான் (1960) |
| 12. | அப்பவொல்ரா | — ஒகதுகு (1960) |
| 13. | கானு | — அக்ரு (1957) |
| 14. | ரோகோ | — லோமே (1960) |
| 15. | டகோமி | — (1960) |
| 16. | நைகர் | — நயாமி (1960) |
| 17. | நைஜீரியா | — லாகோஸ் (1960) |
| 18. | சாட் | — போட்லாமி (1960) |
| 19. | கமரோன் | — யவோண்டா (1961) |
| 20. | மத்திய ஆபிரிக்கக் குடியரசு | — பங்கூயி (1960) |
| 21. | சூடான் | — காட்டூம் (1956) |
| 22. | எதியோப்பியா | — அடிஸ் அபாபா (1950) |
| 23. | சோமாலியா | — மோகதிசு (1960) |
| 24. | கென்யா | — நைரோபி (1963) |
| 25. | உகண்டா | — கம்பாலா (1962) |
| 26. | ருவாண்டா | — (1962) |
| 27. | புருண்டி | — உசும்புரு (1962) |
| 28. | கொங்கோ | — கின்சாசா (1960) |
| 29. | கொங்கோ | — பிறேசவில் (1960) |
| 30. | காபொன் | — லிப்றேவில் (1960) |
| 31. | சாம்பியா | — லுவாண்டா (1963) |
| 32. | ரன்சானியா | — டார் எஸ் சலாம் (1961) |
| 33. | றெடீசியா (சிம்பாவே) | — சலிஸ்பெறி (1967) |
| 34. | பொத்ஸ்வானு | — (1966) |
| 35. | தென்னுபிரிக்கா | — கேப்ரவுண் (1931) |
| 36. | லெசோத்தோ | — மசேறு (1966) |
| 37. | மலகாசி (மடகஸ்கார்) | — ரனுறிவ் (1960) |

இன்று ஸ்பானிய சகாரா, மாரிடோனியா, கம்பியா, போட்கினியா, ஸ்பானியகினியா, அங்கோலா, தென்மேல் ஆபிரிக்கா, சுவாசிலாந்து என்பன சுதந்திரமடையாத நாடுகளாக ஆபிரிக்காவிலுள்ளன. இந்நாடுகள் குடியேற்ற வாதிகளின் பிடியிலிருந்து விடுதலை பெற முயன்று வருகின்றன.

## ஆசியாவில் ஐரோப்பிய ஆதிக்கம்


கீழைத்தேச நாடுகளில் இந்தியா இலங்கை, கிழக்கிந்தியத் திவுகள், பிலிப்பைன் தீவுகள் என்பன ஐரோப்பியக் குடியேற்ற நாடுகளாக இருந்துள்ளன. மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்குமிடையே வெகு காலமாக வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வாஸ்கொடகாமாவின் இந்திய வருகையின் பின் கீழை நாடுகளில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர், ஸ்பானியர் என்போர் இடைவிடாது முயன்றனர்.

இந்தியா, இலங்கை, கிழக்கிந்தியத்தீவுகள் என்பனவற்றைப் பொறுத்தளவில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தியவர்கள் போர்த்துக்கேயராவர். கோவா, பம்பாய், சான்தோம், கூக்லி, கொழும்பு என்பன போர்த்துக்கேயரின் வியாபாரத்தலங்களாக விளங்கின. பதினேழாம் நூற்றுண்டில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் என்போர் கீழைத்தேசங்களில் வியாபாரத் தலங்களை நிறுவ முயன்றனர். அதனுல் அவர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. ஒல்லாந்தர் 1639-இல் யாகர்த்தாவைக் (யாவா) கைப்பற்றினுர்கள். 1658-இல் இலங்கையும் அவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டது. கிழக்கிந்திய தீவுகள், இலங்கை, இந்தியாவில் சில பாகங்கள் (பழவேற்காடு, சூரத்து, நாகபட்டினம், கொச்சி) என்பன ஒல்லாந்தர் வசமாயின. இதே காலத்தில் ஆங்கிலேயர் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். ஆங்கிலேயர் இந்தியாவிலும் ஒல்லாந்தர் கிழக்கிந்திய தீவுகளிலும் தமது வியாபாரத்தை நடாத்தினர்.

பிரான்சியர் 1668-இல் சூரத்தில் ஒரு வியாபாரப் பண்டகசாலையை அமைத்துக் கொண்டனர். பின்னர் பாண்டிச்சேரி, மசூதிப்பட்டினம் என்பனவும் பிரான்சியர் வசமாயின. ஆனுல், 18-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இவற்றைப் பாதுகாக்கப் பலமின்றி இழந்தனர். இந் நூற்றுண்டில் பிலிப்பைன் தீவுகளில் ஸ்பானியர் ஆதிக்கம் செலுத்தினர். எனினும், கீழைத்தேச நாடு



களைத் தொடர்ந்தும் தமது குடியேற்ற நாடுகளாக வைத்திருக்க மேற் குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகளால் இயலவில்லை. இந்தியாவில் கிளர்ந்தெழுந்த சுதந்திர உணர்ச்சியின் பயனுக, ஆங்கிலேயர் இந்தியாவிற்கு 1947-ம் ஆண்டு சுதந்திரம் வழங்கினர். 1948-ம் ஆண்டு கிழக்கிந்திய தீவுகள் சுதந்திரம் பெற்றன. இந்தோனேசியக் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. ஸ்பானியர் வசமிருந்த பிலிப்பைன் தீவுகள் 1898-இல் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவிற்கும் ஏற்பட்ட போரின் பயனுக, அமெரிக்கா வசமாயின. 1946-ஆம் ஆண்டு இத்தீவுகள் சுதந்திரம் பெற்றன.




18-ம் நூற்றுண்டில் ஐரோப்பியக் குடியேற்றங்கள்

4348 oc

## பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள்

குடியேற்ற நாடுகள் அரசியற் சுதந்திரம் எய்திய பின்னரும் பழைய ஏகாதிபத்திய நாடுகள் தமது குடியேற்றவாதக் கொள்கைகளுக்குப் புதிய திருப்பம் கொடுத்து மறைமுகமாகச் செயலாற்றி வருகின்றன. பிரித்தானிய குடியேற்றசாம்ராச்சியத்திலுள்ள நாடுகள், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விலகிவிடாமல் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பே பொதுநல அரசுக் கூட்டாகும். பிரித்தானியாவிடமிருந்து அரசியற் சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாடுகள் யாவும் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் எனப்பட்டன பொதுநல அரசுக்குட்பட்ட நாட்டு

119460

மக்கள் பிரித்தானிய அரசுக்கு விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும். பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகளாக (பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளாக) கனடா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை முதலான நாடுகள் இடம்பெற்றன. ஆனால் கனடா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து என்பவற்றிலுள்ள மக்கள், ஐரோப்பியராவர். அவர்கள் பொதுநலவாய அமைப்பிற்கு விசுவாசமாக இருப்பதில் சிரமமில்லை, ஆனால் இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை என்பன தமது சுதந்திரத்தைப் போராடிப் பெற்ற நாடுகள்; சுதேச மக்களைக் கொண்ட நாடுகள். இவை பிரித்தானியாவிற்கு விசுவாசமாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை. ஆனால், பர்மா சுதந்திரம் பெற்றவுடன் பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்க மறுத்து விட்டது. இந்தியா 1950-இல் குடியரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டதிலிருந்து இந்த அமைப்பிலிருந்த போதிலும் தன்னாட்சியும் தன்னிறைமையும் கொண்ட நாடாகி விட்டது. 1972-இல் இலங்கையும் குடியரசானது. இதுவும் தன்னாட்சியும், தன்னாதிக்கமும் கொண்ட நாடானது.

## குடியேற்றவாதத்தின் இயல்பு

ஆரம்ப காலத்தில் கீழைத்தேசங்களின் இயற்கைப் பொருட்களையும், உற்பத்திப் பொருட்களையும் வர்த்தகத்திற்காகப் பெற வேண்டும் என எண்ணம் கொண்டிருந்த மேற்கத்திய நாட்டு வியாபாரிகள், புதிய கடற் பாதைகளையும், புதிய நாடுகளையும் தம் சொந்த முயற்சியாலும், பொருட் செலவாலும் கண்டுபிடித்ததன் பின், அவற்றிற்கு உரிமை கொண்டாடலாயினர். தாம் பெற்றிருந்த நவீன ஆயுதங்களாலும், படைப்பலத்தாலும் அந்நாடுகளை இலகுவில் கைப்பற்றி நிர்வகிக்கலாயினர்.

தாம் கடற்பயணங்களில் செலவிட்ட மூலதனம் முழுவதையும் இக்குடியேற்ற நாடுகளிலே உடனடியாகப் பெற்றுவிட வேண்டும் என அவாக் கொண்டனர். எனவே, அந்நாடுகளைச் சுரண்டத் தொடங்கினர். அந்தந்த நாடுகளில் பெறக் கூடிய அதிக விலை மதிப்புள்ள பொருட்களை சட்டமியற்றியும், விலைகளைத் தாமே தீர்மானித்தும், சுதேசிகளைப் பயமுறுத்தியும் பெறலாயினர். ஒருபோதும் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சியோ அபிவிருத்தியோ, முன்னேற்றமோ கவனிக்கப்படவில்லை. உதாரணமாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வாசனைத்



திரவியங்கள், விலையுயர்ந்த கற்கள், முத்துக்கள், மயிலிறகுகள், யானைத் தந்தங்கள் போன்றவற்றையும் தென்னாபிரிக்காவிலிருந்து விலையுயர்ந்த உலோகங்கள், வைரங்கள், நிலக்கரி, பொன் போன்றவற்றையும் தென்னமெரிக்க ஆசெந்தீனாவிலிருந்து கம்பளி. பாற்பண்ணைப் பொருட்கள் போன்றவற்றையும் கடத்தினர்.

சுதேசமக்களை மிகவும் கொடூரமான முறையில் நடத்தி வேலை வாங்கினர். நாள் முழுதும் வேலை; குறைந்த கூலி, வேலையை விட்டு நீங்க முடியாத நிலை, நீங்கினாலோ, தப்பி ஓடினாலோ, வேலை செய்ய மறுத்தாலோ, கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். சுதேசமக்களின் சொந்த வேலை செய்யவிடாது தங்கட்குத் தேவையான வேலையைச் செய்யத் தூண்டினர். இதனால் உள்நாடுகளில் எழுந்த கலவரங்களை அடக்குமுறை கொண்டு அடக்கினர்.

குடியேற்ற நாடுகளைத் தங்கட்கு மூலப்பொருள் வழங்கும் நாடுகளாகவும், தங்களது உற்பத்திப் பொருட்களின் சந்தைகளாகவும் கருதலாகினர். எனவே இரு வழிகளிலும் குடியேற்ற நாடுகள் சுரண்டப்பட்டன. அதேவேளையில் ஏகாதிபத்திய நாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் குடியேற்ற நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டன, இப் போர்களும் அந்தந்தக் குடியேற்ற நாடுகளிலேயே நிகழ்ந்தன. இதனாலும் குடியேற்ற நாடுகள் பாதிக்கப்பட்டன. இதற்குச் சிறந்த உதாரணமாக இலங்கையைக் கூறலாம்.

ஏகாதிபத்திய நாடுகள் பெரும்பாலும் குடியேற்ற நாடுகளின் பொருளாதாரம், பண்பாடு நாகரிகம் என்பனவற்றை முற்றாக அழித்தன. ஸ்பானியரால் மத்திய தென்னமரிக்க நாடுகளில் பரவி வந்த இன்கா, அஸ்ரக் (Inka, Aztec) நாகரிகங்கள் முற்றாக அழிந்தொழிந்தன. இவ்வாறு குடியேற்ற நாடுகளின் பொருளாதாரத்தை முறியடிக்கவும், அவற்றின் மூலப் பொருட்கள் பெறவும் ஏகாதிபத்திய நாடுகள் முனைந்தமைக்குக் காரணம், ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியால் அங்கு உற்பத்தியினளவு அதிகரித்தமையும், அவற்றிற்கான சந்தைகளுக்கு நெருக்கடி ஏற்பட்டதுமாகும். கைத்தொழில் மயமான ஐரோப்பிய நாடுகளின் எண்ணிக்கை கூடக் கூட, அவற்றிடையே இதுவரை ஏற்படாத அளவு பகைமையும் போட்டா போட்டிகளும் ஏற்பட்டன. எனவே, ஏற்கனவே விளங்கிய குடியேற்ற நாடுகட்கு பலத்த நெருக்கடியும், பல புதிய சந்தைக்காக ஏகாதிபத்திய நாடுகள் கைப்பற்றிய புதிய நாடுகட்கு தலையிடியும் தோன்றலாயின.

கைப்பற்றிய குடியேற்ற நாடுகளில் அந்நாட்டு மக்களின் தேவை, பாரம்பரியம், பழக்கவழக்கம், பயிர்ச் செய்கை என்பன புறக்கணித்து தங்கட்குத் தேவையான பயிர்களை பயிரிடும்படியும், தொழில் முறைகளில் ஈடுபடும்படியும் வற்புறுத்தினர். இதனால், குடியேற்ற மக்கள் உணவுப் பொருட்களுக்கு தங்களை எதிர் பார்க்கும் வண்ணம் நிலைமையை அமைத்துக் கொண்டனர். இந்த இயல்பு எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் காணப்பட்டது.

ஏகாதிபத்திய நாடுகள் தாம் கைப்பற்றிய குடியேற்ற நாடுகளில் தமது நாட்டினரைப் பெருந் தொகையாகக் கொண்டு வந்து குடியேற்றினர். கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னுபிரிக்கா ஆகிய நாடுகளில் வெள்ளையர்கள் அதிகம் குடியேறினர். உதாரணமாக கி. பி. 1700-ம் ஆண்டில் அமெரிக்காவில் 3,00,000 மக்கள் ஆங்கிலக் குடியேற்றங்களாலும், 1820-இல் 3¼ மில்லியன் மக்கள் ஸ்பானியரின் குடியேற்றங்களாலும் வந்து சேர்ந்தனர். இதனுல், சுதேசி விதேசி உயர்வு தாழ்வுப் பிரச்சினைகள் இயல்பாகின.

அயனமண்டலப் பழவர்க்கங்கள், பாற்பண்ணைப்பொருட்கள், கரும்பு, கரும்பிலிருந்து உற்பத்தியான சீனிப்பொருட்கள் என்பனவற்றை தமது நாடுகளுக்குக் கொண்டு சென்றது மட்டுமல்லாமல், தங்களது ஏனைய குடியேற்றங்களில் வர்த்தகத்திற்காகக் கரும்பும் பயிரிடத் தொடங்கி, அதில் வேலை செய்வதற்காக ஆபிரிக்காவிலிருந்து நீக்கிரோவர்களை அடிமைகளாகவும் இந்தியர்களை கூலிகளாகவும் மத்திய அமெரிக்கா, பிஜித்தீவுகள், வடகீழ்பிறேசில், மேற்கிந்தியத்தீவுகளுக்கு கொண்டு சென்றனர். குடியேற்ற நாட்டு சுதேசிகளை ஏகாதிபத்தியவாதிகள் மானிடப் பிறப்புக்களாகவே கருதவில்லை. அவுஸ்திரேலியாவின் மயோரி இனம், ஆபிரிக்காவின் பண்டுலப் இனம் என்பன ஏகாதிபத்தியவாதிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதேபோலவே, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வடகீழ்ப்பாகம், ஆசெந்தீனு போன்ற இடங்களில் இருந்த அமெரிக்க இந்தியர்கள் பெருமளவு விதேசிகளால் அருகிவிட்டனர்.

சிலுவை யுத்தத்தில் துருக்கியரிடம் தோற்றவுணர்வு மறைமுகமாகவும் நேரடியாகவும் ஏகாதிபத்தியவாதிகள் மத்தியில் இருந்து வந்ததால் தமது குடியேற்றங்களில் மதப்பரம்பலுக்கு முக்கியத்துவம் அளித்தனர். இது பெரும் மதப்பூசல்களை குடியேற்ற நாடுகளில் தோற்றுவித்தன.



குடியேற்ற நாடுகளில், சிறு தொகையினரான அன்னியர், பெருந் தொகையினரான சுதேசிமக்களை ஆட்சி செலுத்தினர். தென்கீழ் ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்றனவற்றில் இந்நிலை ஏற்பட்டது. இன்றும் ரூடீசியாவில் இந்நிலைமை நிலவுவதைக் காணலாம். சென்ற ஆண்டில்தான் ஏகாதிபத்தியவாதிகள் சுதேசமக்களுக்கு ஆட்சியில் பங்கேற்க தேர்தல் முறையில் சம்மதம் வழங்கினர். மொசாம்பிக், கெனியா போன்ற ஆபிரிக்க நாடுகளில் உயர் பதவிகளை ஏகாதிபத்தியவாதிகளே வகிப்பதினுல், அவர்கள் சமூக அந்தஸ்தில் உயர் மட்டத்தில் (Super Structure) வாழ்கின்றனர். இந்தியா, இந்தோனேஷியா, சூடான், கானு போன்ற நாடுகளிலும் இந்த நிலைமை காணப்பட்டது. எனினும், துருக்கி, ஜப்பான், திபெத், ஜேமன் (Yemen) போன்ற நாடுகளை இயற்கையமைப்பு, காலநிலை போன்ற காரணங்களினுல் ஏகாதிபத்தியவாதிகளால் தமது குடியேற்றங்களாக மாற்றிவிட முடியவில்லை.

## குடியேற்றம் காரணமாக தோன்றிய பிரச்சினைகள்

குடியேற்ற நாடுகளில் வாழும் இன்றைய சந்ததியினர் தங்களின் மூதாதையருக்கும், தாய் நாட்டிற்கும் ஏகாதிபத்தியவாதிகள் இழைத்த கொடுமைகளை மறக்க மறுக்கிறுர்கள். இவர்கள் இன்று வலுவிழந்து போயிருக்கும் வல்லரசுகள் மீது கடந்தகால நிகழ்ச்சிகளுக்காக பல விதங்களில் பரிகாரம் தேட முயற்சிக்கின்றனர். தங்கள் நாடுகளில் இன்று எஞ்சியிருக்கும் ஐரோப்பியர் மீது நல்லெண்ணம் கொண்டிருக்க மறுக்கின்றனர். ஏகாதிபத்திய நாடுகளின் நிர்வாக முறைகளையும், மத நம்பிக்கைகளையும் எள்ளி நகையாடும் விதத்தில் நடவடிக்கையிலீடுபடுகின்றனர். ஆபிரிக்காவின் உகண்டா முன்னைய ஜனுதிபதி இடி அமினின் செயல்கள் இதனையே புலப்படுத்துகின்றன.

கடந்த ஐந்நூறு ஆண்டுகளாக தமது நாட்டைச் சுரண்டிக் கொள்ளையடித்த ஐரோப்பியர் அவற்றிற்கு ஈடாக இன்றுள்ள தம் நாட்டிற்கு கல்வி, தொழினுட்பம், வேலைவாய்ப்புத் திட்டங்கள் மூலம் உதவி செய்யக் கடமைப்பட்டுள்ளனர் எனவும் கருதுகின்றனர்.

குடியேற்ற நாடுகளில் இன்று ஐரோப்பியரும், சுதேச மக்களும் கலந்து வாழ்வதால், விதேசிகள் முன்னைய பழக்கவழக்கங்க

ளின்படி அரசியல், பொருளாதார சலுகைகளைப் பெற்று வாழ்கின்றனர். இது சுதேச மக்களிடையே அதிருப்தியையும், சீற்றத்தையும் தோற்றுவித்துள்ளது. றொடீஷியா போன்ற நாடுகளில் அயன்சிமித் போன்றோரின் தலைமையில் சுதேசிகள் ஈவிரக்கமற்ற முறையில் தண்டிக்கப்படுவதும் குடியேற்ற வாதத்தின் பிரதிபலிப்பே.

குடியேற்றநாடுகள் பலவற்றில் இன்றும், ஏகாதிபத்திய வாதிகளின் படைத்தளங்கள் அமைந்திருக்கின்றன. இது உள்ளூர் தேசியவாதிகளின் போராட்டங்கட்கு பெரும் இடையூறாக அமைகின்றன.

மத்திய அமெரிக்காவில் காணப்பட்ட இன்கா, அஸ்ரக் கலாச்சாரம், பொருளாதார அமைப்புகளை ஸ்பானியரின் செல்வாக்கு தகர்த்து எறிந்தது. அதுபோலவே, இலத்தீன் அமெரிக்காவில் ஸ்பானியர், போர்த்துக்கேயர் தமது செல்வாக்கை நிலைநாட்டியதால் அங்கும் கலப்புக் கலாச்சாரங்கள் தோன்றி, இன்று பல பிரச்சனைகட்கு வித்திட்டுள்ளன.

வட அமெரிக்கா, ஆசெந்தீனா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் ஏகாதிபத்தியவாதிகள் நடத்திய போரினால் அங்கு பழைய கற்கால நிலையில் வாழ்க்கைமுறை கொண்டிருந்த சுதேசிகள் ஆயிரக்கணக்கில் மறைந்தொழிந்தனர். அமெரிக்க இந்தியர், மயோரிச் சாதியினர் இவ்வாறே அருகினர். இதே போலவே, ஆபிரிக்க நீக்கிரோவரை அடிமைகளாகக் கொண்டு சென்று விற்றமையால், இன்று அமெரிக்காவில் நிறப்பிரச்சினை முக்கியமானதொன்றாக மாறிவிட்டது. முன்னைய அமெரிக்க ஜனாதிபதி பிட்ஸ்ஜரால்ட் கென்னடி, மாட்டின் லூதர்கிங் போன்றோர் கொலையுண்டு போகவும் காரணமாகியது.

இருண்ட கண்டமென அக்காலத்தில் அழைக்கப்பட்ட ஆபிரிக்கா உலகநிலப்பரப்பில் $\frac{1}{5}$ பாகம் கொண்டதாகும். இக்கண்டம் குடியேற்றவாதிகளால் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இதனால் அவர்களிடையே ஏற்பட்ட போட்டி பொறாமையால், அமைதியான வாழ்க்கை கொண்டிருந்த பூர்வகுடிகள் அழிந்தனர். இன்றும் இப்பிரிவு பல அரசியற் போராட்டங்கட்கு காரணமாகியுள்ளது. இவ்வாறு இலத்தீன் அமெரிக்கா ஸ்பானியராலும், சைபீரியா ரூஷியராலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இப்பிரிவினைகள் இன்றைய நாட்டின் ஒற்றுமைக் குலைவுக்கு காரணமாகியது. ரூஷியர், ஆசிய மந்தை மேய்க்கும் நாடோடிக் கூட்டத்



தினரைத் துரத்தினர். இதனால் அவர்களின் பொருளாதார அமைப்பு சீர்குலைந்திருந்தது. இதேபோலவே ஐரோப்பியருக்கு இறப்பர் தேவை நெருக்கடி (Rubber Boom) ஏற்பட்டபோது அமேசன் வடிநிலத்திலிருந்த பூர்வகுடிகளான தென்னமெரிக்க இந்தியர்களையும், ஆபிரிக்காவில் கொங்கோ வடிநிலத்தில் காணப்பட்ட நீக்கிரோவரையும் கட்டாயப்படுத்தி இறப்பர் பால் சேகரிப்பில் போர்த்துக்கேயர் ஈடுபடுத்தினர்.

20-ம் நூற்றாண்டில் சோவியத் பொதுவுடமைவாதிகள் கசாக்கியரையும், ஏனைய மத்தியாசிய மக்களையும் ஒன்றுபடுத்தி ரூஷியாவை வல்லரசாக்கினர்.

இத்தாலிய பாஸிச ஆட்சியாளர் ஆபிரிக்காவில் அபீசீனியாவைக் கைப்பற்றினர். இதற்கு இவர்கள் நவீன ஆயுதங்களையும் நச்சு வாயுக்களையும் பயன்படுத்தினர். இவர்களின் ஊடுருவல் இன்றைய அபிசீனியா (எதியோப்பியா)வில் பல பிரச்சினைகளுக்கு காரணமாகியுள்ளது. அதுமட்டுமன்றி இந்தக் குடியேற்றவாதம், உண்மையான ஐரோப்பியரே உலகின் உன்னத மனிதர் என்ற உணர்வை வளர்க்கலாயிற்று. இக்கருத்தால் கவரப்பட்ட நாஸிஸ அடால்ஃப் ஹிட்லர் ஜேர்மனியிலிருந்த யூதர்களை, படுகொலை செய்தும், நச்சுவாயு அறையிலிட்டும் கோடிக்கணக்கானோரைக் கொன்றழித்தான். இன்றும் ஜேர்மனியிலுள்ள நூரன்பேர்க் சிறைக்கூடம் இதனை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

குடியேற்றவாதிகளால் அடிமைகளாகவும், கூலிகளாகவும் தம் நாடுகட்குக் கொண்டுவரப்பட்ட பிறநாட்டு பூர்வகுடிகள், இன்று ஒரு சமூகப் பிரச்சினையாக மாறியுள்ளனர். உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாட்டில் 10% நீக்கிரோவராகவும், அமெரிக்க இந்தியராகவும், யப்பானியராகவும் விளங்குகின்றனர். இவர்கள் சிக்காகோ, டெட்ராயிற், சின்சினாட்டி ஆகிய இடங்களில் உள்ளனர். ஆனால் இன்று உண்ணாட்டில் வெள்ளையருக்கு ஆண்டுக்குரிய ஆகக்குறைந்த ஊதியமாக அமெரிக்க டொலர் 5300-ம், வெள்ளையரல்லாதோருக்கு 2700 ஆகவும் உள்ளது. இந்த ஊதியப் பிரச்சினை ஐரோப்பிய நாடுகளில் முக்கியமாகவுள்ளது.

அமெரிக்க சுதந்திரப் போரின்போது, உண்ணாட்டு மக்களுடன் சேர்ந்து நீக்கிரோவரும் போரிட்டனர். எனவே சுதந்திரத்தில் அவர்கட்கும் பங்குண்டு. சுதந்திரமடைந்த அமெரிக்காவின் இராணுவத்தில் நீக்கிரோவரும் காணப்படுகின்றனர். ஆனால் இது பல வெள்ளையருக்கு அதிருப்தியை அளித்து வருகின்றது.

ஏகாதிபத்திய வாதங்களினால் பல நாட்டுமக்கள் ஒருநாட்டில் வாழ்கின்ற நிலை ஏற்பட்டு பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. அயனவலய இலத்தீன் அமெரிக்காவில் பலவித இனங்கள் உண்டு. ஆசெந்தினாவில் ஐரோப்பியர், மெக்ஸிக்கோ, ஈகுவடோர், பொலிவியா ஆகிய நாடுகளில் அமெரிக்க இந்தியர், கயித்தி (Haiti) ஜமேக்கா, வடகீழ் பிறேசில் ஆகிய நாடுகளில் நீக்கிரோவர் என்போர் அதிகமாக வாழ்வதுடன் ஏகாதிபத்திய இனங்களான ஸ்பானியர், போர்த்துக்கேயரும் வாழ்கின்றனர். இந்த இனக் கலப்புக்கள் பல்வகை முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

ஆனால் தென்னாபிரிக்காவில் நிலைமை வேறாகும். இங்கு பூர்வ குடிகளான நீக்கிரோவர் பாண்டூஸ் அதிகமாகவும் ஐரோப்பியர் குறைவாகவும் உள்ளனர். தென் றொடீசியாவில் ஆங்கிலேயர் உளர். கெனியாவில் 1% மட்டுமே ஆங்கிலேயர். எனவே இங்கு பல இனப் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அல்ஜீரியா, ரியூனிஷியா, மொறோக்கோ ஆகிய இடங்களில் 10% ஆங்கிலேயர் இருந்தனர். ரியூனிஷியா பிரான்சியரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டது. எனினும் அரசியல், பொருளாதார நிலையில் ஆங்கிலேயர், பிரான்சியர், சுதேச மக்களிடையே பல பிரச்சினைகள் எழுந்துள்ளன.

நீண்டகாலமாக ஐரோப்பியரின் ஆதிக்கத்துள் குடியேற்ற நாடுகளிருந்தமையால் இந்நாடுகள் சுதந்திரமடைந்த பின்பும் தம் சுயதேவையை உணவு, உடை உறையுள் விடயத்தால் பூர்த்தி செய்ய முடியாதுள்ளன.

குடியேற்ற காலங்களில் அந்தந்த நாடுகளில் நுகர்வோனின் பயன்பாட்டிற்குப் பதிலாக வர்த்தக நோக்கே பயிர்ச்செய்கையிலிடம் பெற்றது. அதாவது குடியேற்ற நாடுகள் தமது சொந்த நாட்டு சந்தைக்காகப் பயிரிடாது பிறநாட்டுச் சந்தைக்காகப் பயிரிட்டன. உதாரணமாக இலங்கை குடியேற்ற நாடாக விளங்கிய காலத்தில் நாட்டின் பிரதான உணவுத் தானியமான நெல்லினை விட்டு, ஆங்கிலேயரின் பானப் பொருளான தேயிலை, கோப்பி போன்றவற்றைப் பயிரிட்டனர். இதனால் இன்று இலங்கை நுகர்வுப் பொருட்களுக்கு பிறநாட்டு உணவுக்கப்பலை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. அதே வேளையில் நமது உற்பத்திப் பொருளான தேயிலை, கோப்பி என்பவற்றின் விலையை ஐரோப்பிய பொதுச் சந்தையே தீர்மானிக்கின்றது. இந்த இழிநிலை நாட்டின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கின்றது.



குடியேற்ற நாடுகளில் பெருந்தோட்ட முதலாளிகளும், வர்த்தகர்களும், சிறு தோட்ட முதலாளிகளும் உருவாக நிலமற்ற விவசாயிகள் அதிகரித்தனர். இவர்கள் மக்களின் உணவு உற்பத்தியைப் பெரிதும் தடை செய்யலாயினர். இவர்கள் ஏகாதிபத்திய வாதிகளின் கைப்பொம்மையாக விளங்கியதால் சுதந்திரம் பெற்ற பின்பும் தம் பழைய இயல்புகளை விடாது இயங்கி வருகின்றனர்.

குடியேற்ற நாடுகளின் இயற்கை வளங்களை இவர்கள் சுரண்டிச் சென்றதால், இந்நாடுகள் பெருமளவு வறுமையில் ஆழ்ந்து வளர்ச்சியற்றிருக்கின்றன. இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் குடியேற்றவாதத்திற்கு ஆளானவையாகும்.

குடியேற்ற நாடுகளின் மூலப் பொருட்கள் ஏகாதிபத்திய நாடுகட்கு சென்றமையால் தொழில் வளர்ச்சி குன்றியுள்ளது. அத்துடன் வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்ததால் உள்நாட்டுத் தொழிலாளிகள் வேலை வாய்ப் பிழந்ததுடன் தொழில் வளர்ச்சி குன்றியது உள்நாட்டு உற்பத்திக்கும் மதிப்புக் குறைந்தது.

குடியேற்றங்களை இழந்த ஏகாதிபத்தியங்கள் புதிய முறையில் நவகுடியேற்றவாதம் ஒன்றினை அமைத்தன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்பின் குடியேற்றவாதம் படிப்படியாக தளர்ந்து சிதறியது. ஏகாதிபத்திய அரசுகள் குலைந்து போனாலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளின் செல்வாக்கே காரணமாகும். ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் மீது நேரடியான அரசியல் மேலாதிக்கத்தை ஏகாதிபத்தியம் இழந்துவிட்டாலும் அதே சக்திமிக்க நிலைகளை இன்னும் தன்வசம் வைத்துள்ளது. பொருளாதாரம் அரசியல் அக்கறை என்பன பெரும்பாலும் முன்போலவேயுள்ளன. இதற்கு உதவுவது தான் நவகுடியேற்றவாதமாகும்.

நவகுடியேற்றவாதம் என்பது வல்லரசுகள் வர்த்தகம், கைத்தொழில் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், பண முதல் செய்வது மூலமும், கடன்வழங்கல், உதவிநல்குதல். அவசியம் ஏற்படும் பொழுது தமது படைப்பலத்தை அளிப்பது மூலமும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டலாகும்.

நவகுடியேற்றம் காரணமாக பிறநாடுகளின் அரசியல் பொருளாதாரத்தில் ஏகாதிபத்திய நாடுகள் தலையிடுவது சுலபமாயிற்று. இதற்கு உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா சிலி நாட்டின் ஜனாதி

பதியான அலண்டேயைக் கொன்று, அங்கு புதிய இராணுவ ஆட்சியை தோற்றுவித்தமையைக் கூறலாம்.

ஆனால் ஏகாதிபத்திய நாடுகளை, குடியேற்றத்திற்கு ஆளாகாத அராபிய நாடுகள் இன்று ஆட்டிப்படைக்கின்றன. மத்திய கிழக்கு கனிப்பொருணெய் வளத்தை ஏகாதிபத்தியவாதிகளால் பெறமுடியவில்லை. இவர்கள் ஏனைய நாடுகளின் அரசியலில் தலையிடுவது மட்டுமன்றி தங்களிடமிருந்து கனிப்பொருணெய்யைப் பெற்று, போர்க்கருவிகளைச் செய்து தங்களின் விரோத நாடுகட்கு விற்பனை தடைசெய்ய 'ஒபெக்' (Opec) எனும் கனிப்பொருணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் தாபனம் ஒன்றை அமைத்து, கனிப்பொருணெய்யின் விலையை அடிக்கடி கூட்டி வருகின்றனர். இந்தப் போக்கில் தொடர்ந்து நடந்தால் 1980-ம் உலக நாடுகளின் முழு நாணய ஒதுக்கீட்டில் 75% அராபியருக்கு சொந்தமாகிவிடும். இத்தகைய முயற்சிகளே இன்றைய நவ குடியேற்றவாதத்திற்கு எதிராக உள்ளன.

ஆகவே குடியேற்வாதம் முடிவடைந்த பின்பும் அதன் வடிவம் வேறொரு உருவில் செயற்பட்டு வருவதுடன், உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்முகநாடுகள், வளர்ச்சிபெறு நாடுகள் என்ற பிரிவு தோன்றவும், மூன்றுவது அகிலம் என்று சொல்லப்படும் நிலை உருவாகவும் காரணமாயிற்று.

## இலங்கையில் குடியேற்றவாதம் ஏற்படுத்திய பிரச்சினைகள்

இலங்கை ஒரு விவசாய நாடாக, சுயதேவையைப் பூர்த்தி செய்யும் பயிர்ச்செய்கை முறையைப் பின்பற்றி, நெல்லைப் பிரதான உணவுத் தானியமாகக் கொண்டு, தேவைகள் குறைந்த சமூகமாக விளங்கி வந்தது. எனவே நாட்டில் தன்னிறைவு நீண்டகாலமாக நிலவிவந்ததுடன், ஆரம்பகாலங்களில் உணவுப் பொருட்களை ஏற்றுமதியும் செய்துவந்தது. இலங்கையின் உணவுப் பொருட்கள் இந்தியா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுவந்தது. ஆனால், அன்னியரின் குடியேற்றத்தால் தன்னிறைவு குலைந்தது; நெற்செய்கை பெருமளவு அழிந்தது; பற்றுக்குறை ஏற்பட்டது; ஏற்றுமதிக்குப் பதிலாக உணவுப் பொருள் இறக்குமதி தோன்றியது.

நாட்டின் விவசாய சமூக அமைப்பு மாறி, பெருந்தோட்டச் சமூகம் தோன்றியது. முன்பு சிறிய சிறிய நிலப்பரப்புகளில் செறிவான முறையில் கிராம அமைப்பில் வாழ்ந்து கொண்டிருந்த



மக்கள், பரந்த நிலப்பரப்புகளில் ஆங்காங்கு சிதறிப் பரவினர். நெற்செய்கைக்குப் பதிலாக அன்னியரின் ஏற்றுமதிப் பொருளான தேயிலை, கோப்பி, இறப்பர் போன்றன பயிர்ச்செய்கைப் பொருட்களாயின. இலங்கை மக்களுக்கு அன்னியமானவையாகவும், அவற்றின் உற்பத்தி முறைகளும் வேறு கோலம் கொண்டிருந்தன.

இலங்கை மக்களின் சொந்தத் தேவையைவிட, இவ்வுற்பத்திப் பொருட்கள் வர்த்தக நோக்கில், உலகின் வேறொரு பாகத்திலிருப்பவர்களின் தேவைக்காக உற்பத்தி செய்யப்பட்டன. அதாவது உண்ணாட்டுச் சந்தைக்குப் பதிலாக வெளிநாட்டுச் சந்தைக்கே முதலிடம் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி ஏகாதிபத்தியவாதிகளின் விளைபொருட்களை பயிரிடாமல் நெல்லைப் பயிரிட்டவர்களின் நிலங்கள் சட்டத்தின் மூலம் பறிமுதல் செய்யப்பட்டன; தண்டனையும் வழங்கப்பட்டன. இதனால் புராதன பயிர் முறைகள் மெல்ல மெல்ல அருகலாயின.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வருகையால், நாட்டில் பெருந்தோட்ட ஆங்கிலேய முதலாளிகளும், வர்த்தகர்களும் தோன்றியதுபோல், பெருந்தோட்டங்கள் கொண்ட கறுப்புத் துரைமார்களும், சிறு முதலாளிகளும் தோன்றினர். ஏகாதிபத்தியவாதிகளால் சுதேச மன்னர்கள் மறைய, அந்த இடங்களை சுதேச முதலாளிகள் ஆக்கிரமித்துக் கொண்டதுடன் அன்னியருக்கு விசுவாசமாகவும் நடந்து கொண்டனர். இதனால், சுதேச மக்களை பெரிதும் வருத்தி, அன்னியருக்கு செல்வமீட்டிக் கொடுத்து, தாமும் பொருள்வளத்தால் உயர்ந்தனர்.

உண்ணாட்டின் உன்னத செல்வங்களான வாசனைத் திரவியங்கள், யானைத் தந்தங்கள், மயிலிறகு, விலையுயர்ந்த கற்கள் என்பன வெளிநாட்டிற்கு கொண்டு செல்லப்பட, நாட்டின் இயற்கையான மூலவளங்கள் சுரண்டப்பட்டு பெருமளவு குறைந்தன.

உண்ணாட்டில் விளைந்த மூலப் பொருட்களான இறப்பர், பருத்தி என்பன ஏகாதிபத்திய நாடுகட்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் உற்பத்திப் பொருளாக நமது நாட்டில் விற்பனைக்காக வந்த பொழுது சுதேசமக்கள் பெருமளவு பணம் கொடுக்க நேரிட்டது. இதனாலும் நாடு மென்மேலும் வறுமையிலாழ்ந்தது.

மூலப் பொருட்கள் வெளிநாடு சென்றதால் நமது நாட்டு தொழிலாளருக்கு வேலைவாய்ப்பு குன்றியது. முன்பு நெல்வயல்கள் பறிக்கப்பட்டதால் நிலமற்ற விவசாயிகள் தோன்றியிருந்

தனர். எனவே நாட்டில் நிலமற்ற விவசாயி, வேலையற்ற தொழி
லாளி என்ற நிலை உருவாகியது. இது வேலையில்லாத் திண்டாட்
டப் பிரச்சினையை உருவாக்கியது. இந்த நிலை 1948—ல் சுதந்திர
மடைந்து 30 ஆண்டுகள் கடந்த பின்பும் மாறுவதற்குப் பதி
லாக உக்கிரமடைந்து விளங்குகின்றது. இன்று வேலை செய்யக்
கூடிய 16 — 55 வயதுக்குட்பட்டவர்களில் 1,25,000 மக்கள்
வேலையற்றிருக்க இக்குடியேற்றவாதிகளே காரணமாவர்.

ஏகாதிபத்தியவாதிகள் அன்று தங்கட்குச் சாதகமாக
அமைத்துக் கொண்ட வர்த்தகக் கொள்கையையே சுதந்திர
மடைந்த பின்பும் இலங்கை பின்பற்றியதால் நாட்டு மக்கள்
நன்மையடையவில்லை.

ஏகாதியத்தியவாதிகள் தங்கட்கு நன்மை பயக்கக் கூடிய
கல்வி முறையை நாட்டு மக்களிடையே வற்புறுத்தியதால் சுதேச
கல்வி முறை மறைய, படித்தவர்கள் தேசிய உணர்வு அற்றவர்
களாக மாறினர். ரோமன் கத்தோலிக்கம், ஆங்கில இலக்கியம்,
கணக்கு என்பவற்றிற்கு முக்கியத்துவமளித்து; மக்களை மதமாற்
றம் செய்ததாலும், ஆங்கிலம் கற்பித்தலாலும் தம்முடன்
இணைந்து நாட்டைச் சுரண்ட ஏற்றதான கணக்குவழக்குகளை
சுதேசிகளைக் கொண்டே நடாத்திச் செல்ல இக் கல்விமுறையை
ஏற்படுத்தினர். இதில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

புராதன சமூக அமைப்பும், சமுதாய ஆட்சி நிறுவனங்களும்
மாற, அன்னியரின் புதிய ஆட்சி நிர்வாகம் தோன்றியது. குடி
யேற்ற நாடுகளின் பெற்ற செல்வத்தை அன்னியர் தாய் நாட்
டிற்கு செலவழித்ததால், குடியேற்ற நாடுகள் வறுமையிலாழ்ந்
தன. இதற்கு இலங்கையும் விலக்கல்ல.

# 4 இனம் என்பதன் வரைவிலக்கணங்கள்

இனம் (Race) என்ற சொல் இன்றைய உலக அரங்கில்
சமூக, பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் கொண்டுள்ளது.
இதன் அடிப்படையில் பல்வேறு நாடுகளின் நாளாந்த செயல்
முறைகள் அமைகின்றன. போர், சமாதானம், பொருளாதார நல
உறவுகள், இனத்தின் பெயரால் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.



மத்திய கிழக்கில் அராபியர், யூதர் போராட்டங்கள் இனப் போர்களுக்குச் சிறந்த நிகழ்கால உதாரணமாகும். இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு அடிகோலியதும் இவ்வின உணர்வாகும். ' உலகின் மகா மனிதன் ஜேர்மனியனே. அவனையன்றி வேறு இனங்கள் ஜேர்மனியில் வாழக்கூடாது ' என்ற முறையில் யூதர்களை இலட்சக் கணக்கில் அடால்ஃப் ஹிட்லர் கொன்றழித்தான். மனிதனின் நாகரிக உதயத்துடன், இனம் என்கின்ற களங்கங்களும் உருவாகி, அன்றிலிருந்து இன்றுவரை நிலவி வருகின்றன. நாகரிக மேம்பாடுடைய நாடுகள் எனக் கருதப்படும். அமெரிக்கா, பெரிய பிரித்தானியா முதலான ஐரோப்பிய நாடுகளில் கூட இனம் என்ற சொல் பல அர்த்தத்தில் வேரூன்றி, பலவித சீர்கேடுகளை உண்டாக்கி வருகின்றது.

## இனம் என்றால் என்ன?

ஆனால் ' இனம் என்றால் என்ன? ' என்ற கேள்விக்கு யாரும் சரியான வரைவிலக்கணத்தையோ முடிந்த முடிவுகளையோ இன்றுவரை காட்ட முடியவில்லை. ஆனால் 'இனம்' என்னும் சிந்தனை அறிஞர்களிடையே ஆரம்பகால கட்டங்களிலேயே புகுந்து விட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. 1892–ல் பிரீட்ரிக் றற்சல் என்பார் 'மானிடப் புவியியல்' என்னும் நூலின் முதற்பாகத்தை வெளியிட்டார். இது 'வரலாற்றுத் தத்துவம்', 'மக்களினப் பாகுபாட்டியல்' என்பனவற்றை உள்ளடக்கியதாகும். இதன் மறுபாகத்தை 1891–இல் வெளியிட்டார். இவரே 'வால்கர் குண்டே' என்ற தனி நூலை மக்களின் பாகுபாட்டியல் பற்றியதாக வெளியிட்டார். இது உலகில் வாழும் மக்களையும், மக்களினங்களையும் முறைப்படி ஆராய்கின்ற விரிவான நூலாகும். இவ்வாறு பல நூல்கள் ஆராய்ச்சி பூர்வமாக எழுதிய இவரால் கூட இனம் என்பதனைச் சரியாக வரையறுக்க முடியவில்லை; விளக்க முடியவில்லை. எனவே 'இனம் என்று ஒரு பிரிவில்லை, மனித இனம் ஒன்றே' என்ற முடிவுக்குத்தான் இவரால் வரமுடிந்தது.

விடால்டீ லாபிளாச் என்னும் பிரான்சிய அறிஞர் இன ஒழுங்காய்வு' என்ற தனது நூலில் பின்வருமாறு கூறுகின்றார்:

" பிரதான இனவேற்றுமைக்குரிய மூலகாரணங்கள் யாவை எனத் தெரியவில்லை. மானிட இனம் அதன் மாற்றமடையும் சக்தியைப் பேணுகின்றது எனும் கருத்தை நிலைநாட்ட அதிக விபரங்கள் உள்ளன. மேலும் சூழலின் தொடர்ச்சியான தாக்

கத்தினுல் இது புதுப்புதுச் சேர்க்கைகளேயும், உருவாக்கங்களேயும் படைக்கும் திறமையுடையது, என்ற கருத்தை விளக்கவும் ஆதாரமுளது. குலங்கள் என்றும் தோன்றிக் கொண்டிருக்கின் றன. சாத்தியமான இனக்கலப்புகளின் தொகை எவ்வகையிலும் குறைவதில்லே'' இவரின் இக் கருத்தும் இனத்தைச் சரியாக வரை யறை செய்யவோ, இனம் எனபதனே விளக்கவோவில்லே.

எனினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் இனம் பற்றிய ஆராய்வும் முக்கியத்துவமும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட உடலியற் பண்புகளினடியாக நிகழ்ந்து வந்திருக்கின்றன. எனவே இனம் என்பதனைப் புரிந்து கொள்ள வரலாற்று ஆராய்வின் பாதையைப் புரிந்து கொள்வது நலமாகும். இந்த ஆய்விற்கு மானிடவிய லாளர் உலகில் பரந்து காணப்படும் பல்வேறு வகையான மக்கட் கூட்டத்தையும், ஆதிமனிதன் தொடர்பான சான்றுகளேயும் ஆதாரமாகக் கொள்ள முற்படுகின்றனர். இவற்றின் மூலமே மனிதனின் கூர்தலேயும் (Evolution) மனித இனப் பாகுபாட்டை யும் ஓரளவு வரையறை செய்ய முடியுமென நம்புகின்றனர்.

மனித இன வரலாற்றைப்பற்றி (History of race science) வொன் எய்க்ஸ்ரெட் என்பார் ஒரு நூலினை 1937-ல் வெளியிட் டுள்ளார். இதில் இன ஆய்வு வரலாறு ஒழுங்காகச் சொல்லப் பட்டுள்ளது.

இந்த நூலின்படி 1758-ல் கண்டங்களினே அடிப்படையாகக் கொண்டு கரோலஸ் லியனுஸ் இனப்பாகுபாட்டினேச் செய்து அமெரிக்கன், ஐரோப்பியன், ஆசியன், (Asiatic) ஆபிரிக்கன் என நான்கு பிரிவுகளேக் காட்டினுர். இவர்களில் அமெரிக்கன் சிவப்பு நேர்மையான குணம், எளிதில் கோபம் கொள்பவன் என்றும், ஐரோப்பியன் வெள்ளே, நம்பிக்கையுடமை, கபில நிறமானவன் என்றும் ஆசியன் மஞ்சள், துக்கம், வளேந்து கொடுக்காதவன் என்றும் ஆபிரிக்கன் கறுப்பு, சாந்தம், சோம்பேறி எனவும் இனப் பண்புகளே 'இயற்கையின் ஒழுங்கு' (Systema naturae) என்ற நூலில் காட்டினுர்.

1806-ல் புளூமன்பாச் (Blumenbach) என்பார் இனங்களே கோக்கேசியன், மொங்கோலியன், எதியோப்பியன், அமெரிக்கன், மலாய்க்காரன் என தேசங்களினடியாகப் பிரித்தார். 1871-ல் குவியர் (Cuvier) பைபிள் முறையில் ஐரோப்பியன், மொங்கோலி யன், நீக்கிரோ எனப் பிரித்தார். இது சமய அடிப்படையில்



அமைந்த பிரிவாகும். 1840-ல் பிறிசாட் (Prichard) மக்களினங் களே ஏழு பிரிவுகளாக ஐரோப்பியர், மொங்கோலியர், அமெரிக் கன், கொட்டன் ரொட், நீக்கிரோ, பபுவான், அவுஸ்திரேலியன் எனப் பிரித்தார்.

1870-ல் ஹக்ஸ்லி (Huxley) என்பார் உயிர்ச் சூழலடிப்படை யில். மக்களின் வாழகம் நிறம் போன்றனவற்றின் அடிப்படை யில், மக்களினங்களே ஐந்து பிரிவாகப் பிரித்தார். நீக்கிரோவர் மொங்கோலியர், அவுஸ்திரேலியர் என வகுத்த பின்னர் ஐரோப் பியரை அவர்களின் நிற அடிப்படையில் வட ஐரோப்பியர் (Xantho-Chroide) அயர்லாந்தினர் (Melno-Chroide) தொடக் கம் இந்தியர் வரை அடக்கி இரு பிரிவாகக் காட்டினுர்.

1878-ல் ரொப்பினுட் (Topinnrd) மயிரின் தன்மையைக் கொண்டு, நீண்டமயிர் கொண்ட எஸ்கிமோவர், அமெரிக்கர், மொங்கோலியர், அலேவடிவமயிர் கொண்ட ஐரோப்பியர், அவுஸ்திரேலியர், வட அமெரிக்கக் குழுவினர், சுருண்ட மயிர் (Frizzy) கொண்ட நீக்கிரோவர் பபுவானுஸ் எனப் பிரித்தார். மயிரின் குறுக்கு வெட்டு முகத் தோற்றமும் கணக்கிடப்பட்டது. இவர் மட்டுமின்றி 1889-ல் டெனிகரும் (Deniker) இதனே வற்புறுத்தினுர்.

## நிற வேறுபாடு

1885-ல் மக்களின் நிறவேறுபாடு இனப்பாகுபாட்டில் பெரி தும் முக்கிய இடம்பெறலாயிற்று. ஆரம்ப காலத்திலிருந்து தோலின் நிறம் (Skin colour) இன வேறுபாட்டிற்கு இலகுவான அடிப்படையாக விளங்குவதுடன் 15-ம், 17-ம் நூற்றுண்டுகளில் நிறம் முக்கிய இன வேறுபாட்டுக் காரணியாக விளங்கி வந்தது அக்காலங்களில் ஐரோப்பியர் வெள்ளே, கிழக்காசியர் மஞ்சள், ஆபிரிக்கர் கறுப்பு, வடவிந்தியர் சிவப்பு இவ்வாறு கருதப்பட்ட மைக்கு இரு முக்கிய அம்சங்கள் காரணமாகின. 16-ம் நூற்றுண் டுகளில் மக்களின் நீண்ட தூர நகர்வுகள் மிகக் குறுகிய காலத் தில் நிகழ்ந்தன. இதனுல் பல்வேறு இடங்களிலிருந்தும் நகர்ந்து வந்த மக்களின் இயற்கையான நிறத்தைப் பௌதிக சூழல் காரணிகள் அதிகம் பாதிக்கவில்லே. எனவே நிறவேறுபாடுகள் மக்கள் கூட்டத்தை இலகுவாகப் பிரிவினே செய்தன. அக் காலங் களில் நிறத்துடன் மக்களின் பார்வைக் கூர்மையும் (Vision) பிரதானமாகக் கருதப்பட்டது. இதுவும் அக்கால சமுதாய, பொருளாதார நடவடிக்கையில் முக்கிய இடம்பெற்ற அம்ச மாகும்.

1900-ல் ரிப்ளி என்பார் 'ஐரோப்பாவின் இனங்கள்' என்ற நூலில் மனிதனின் உடலியற் கூறுகளை முதன்மைப்படுத்தினர். இவர் மனித இனங்களை மூன்று பிரிவாகப் பிரித்தார் அகன்ற தலை கொண்ட அல்பைன் மக்கள், கருமையான, கட்டையான, ஒடுங்கிய தலைகொண்ட மத்திய தரை மக்கள், உயரமான பொன்னிறத் தலை கொண்ட நோர்டிக் மக்கள் ஆகும். இதனை 1912-ல் இத்தாலியரான பியாசுட்டி (Biasutti) புவியியலடிப்படையில் ஆராய்ந்தார். இவர் தலை, முகம், மார்பு, மயிர் என்பவற்றை இணைத்து உலக மக்களின் பரம்பலை, இனப் பரம்பலாக வகைப்படுத்தினர். இது பெருமளவிற்கு கண்டப் பிரிவாகவே அமைந்தது. ஆபிரிக்கன், அமெரிக்கன், ஆசியன், ஐரோப்பியன், சமுத்திர இன மக்கள் (Oceanic) (மலாயாக்காரரும், பபுவானுக்காரரும்) பொலினேஷியர், அய்னு (Aniu) எனப் பிரித்தார்.

1919-ல் கிறிபித் டெயிலர் கூர்தல் முறையில் மனித இனம் பெற்ற வேறுபாடுகளையும் கண்டப் பிரிவுகளையும் இணைத்து ஆராய்ந்தார். இவரின் ஆய்விற்கு காலநிலை மிகவும் பங்கேற்றது. உதாரணமாக ஆபிரிக்கர் கறுப்பு நிறத் தோலில்லாவிட்டால் சூரிய கதிர்வீச்சின் மிக வெப்பத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. கறுப்பு நிறத்தோல் சூரிய கதிர்வீச்சிலுள்ள ஊதா கடந்த நிறக்கதிர்கள் உடம்பின் உட்செல்ல முடியாது தடுக்கின்றது. அமெரிக்கர் அல்லது நோடிக் இனத்தவர்களின் தோல் வெள்ளையாக, சிவப்பாக இருக்கக் காரணம் அப்பாகங்கள் வெப்பத்திற்குப் பதிலாக குளிரைக் கொண்டிருப்பதேயாகும். 1923-ல் இது தொடர்பாக ஆரரய்ச்சி செய்த ஆர். பி. டிக்ஸன் (R. B. Dixon) என்பாரும் டெயிலரையே பெரிதும் பின்பற்றினர்.

1939-ல் சி. டபிள்யூ. கூன் என்பார் ரிப்ளியின் 500 படங்களை ஆதாரமாகக் கொண்டு ஐரோப்பிய மக்களை இரு இனங்களாகப் பிரித்தார். ஒன்று நியாண்டதல் சபியன்ஸ் என்னும் பலியோலிதிக் வேடுவரின் வழித் தோன்றல்களான அல்பைன், புருன், பொறிபி, லடகொன், லபிஸ் போன்ற குழுக்கள், மற்றது மத்திய தரைக் கடலினமான நோர்டிக், டைனுரிக் ஆர்மனெட், இராஞே முதலிய இனக் குழுக்கள் ஆகும்.

இவ்வாறு மக்களினங்கள் காலத்திற்கு காலம் வெவ்வேறு அளவு கோல்களால் அளவிடப்பட்டு வருகின்றன. இன்று உயிர் சூழலியல் அடிப்படையில் இனப்பாகுபாடு செய்யப்பட்டு வருகின்றது. கண்டங்களிடையே நிகழ்ந்த மக்களின் நகர்வில் ஏற்பட்ட

4348
C-C
...நகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



கூர்தல் மாற்றங்களையே இன்றைய நவீன அறிஞர்கள் முக்கியமாகக் கருதுகின்றனர். இதில் இரத்த வேறுபாடு பிரதான இடம் வகிக்கின்றது. 1900-ம் ஆண்டிலேயே லாண்ட்ஸ்ரெயினர் என்பார் இந்த முறையைப் பின்பற்றினர். உலகில் நான்கு வகையான இரத்த பிரிவுகள் A, B, AB, O உள்ளன. இரத்த அடிப்படையில் அது கொண்டுள்ள ஜீன்ஸ்ஸின் தன்மை - என்பவற்றைப் பொறுத்து ஆராயப்படுகின்றன. இந்த ஆய்வினைப் பெருமளவில் மானிடவியலாளர்களே கையாளுகின்றனர். எனினும் இன்று இன ஆய்விற்காக புதியபுதிய பாகுபாட்டு முறைகள் கையாளப்பட்டு வருகின்றனவாயினும் இனம் பற்றிய தெளிவு ஏற்படவில்லை.

பிரபல ரூஷிய பௌதிக விஞ்ஞானியும், உயிரியல் அறிஞருமான ஐசாக் அசிமோவ் உலகில் மூன்று உயிரினப் பிரிவுகள் உண்டு எனக் கூறுகின்றார். ஹோமோநியாண்டதலெனிசியா, (ஐரோப்பா, வட ஆபிரிக்கா, ரூஷியா, சைபீரியா, பலஸ்தீனம், ஈராக் பகுதி மக்கள்) ஹோமோ றொடீஷியன்சில் (தென்னாபிரிக்க றொடீசிய மக்கள்) ஹோமோசொலென்சில் சொலமன் மக்கள் (யாவாவின் சோலோ நதிக்கரை மக்கள்) எனப் பிரித்துள்ளார்.

இனங்களைச் சரியாக இனம் காணவேண்டும் என சி. எஸ். கூன், எஸ். எம். கார்ன், ஜே. பி. பேர்ட்செல் ஆகிய மூவரும் இணைந்து எழுதிய 'இனம் மனிதனின் இன அமைப்புப் பிரச்சினை பற்றி ஓர் ஆய்வு' என்ற நூலில், மனிதனின் உடலமைப்பு வேறுபாட்டினடியாக 30 இனங்களைக் கண்டு பிடித்ததோடு, அவற்றில் 50 வகையான வேறுபாட்டினையும் கண்டறிந்தனர். ஆகவே இனம் என்பதனை குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கி அராய்வது இலகுவான காரியமட்டுமல்ல; இனம் என்ற வேறுபாடு உண்மையிலேயே உள்ளதா என்ற ஐயமும் எழுந்துள்ளது.

இவை மட்டுமின்றி, மொழி சமய, அரசியலடிப்படையிலும் இன வேறுபாட்டை அணுக முற்படுகின்றனர். மனிதனின் மூளையினளவும் கணக்கிடப்படுகிறதேயன்றி, இனங்களின் புத்திக் கூர்மை, நுண்ணறிவு என்பன அதிகம் கவனிக்கப்படவில்லை. எனினும், கருநிறம் கொண்டவர்கள் புத்திக் கூர்மையற்றவர்களாகவும், ஒழுங்கற்றவர்களாகவும் விளங்க, வெள்ளை நிறத்தோர் இதற்கு மாறாக இருப்பர் என ஐரோப்பியர் கருதுகின்றனர். ஆனால் சமீபகால ஆராய்வுகள் ஒரு மனிதனின் நுண்ணறிவு விருத்தி அவனது சூழலாலே நிர்ணயிக்கப்படுகின்றது என்பதனைக் காட்டுகின்றன. அதுமட்டுமன்றி, ஐரோப்பியரிடையே மந்த புத்தி கொண்டவர்களும், ஆபிரிக்கர்களிடையே நுண்ணறிவு

கொண்டோரும் காணப்படுவதால், இனப்பிரிவுக்கு புத்திகூர்மையை ஆதாரமாகக் கொள்ளவியலாது. மேலும் இவ் வேறுபாட்டிற்கு உதாரணமாக வெள்ளையரல்லாதோரும், ஐக்கிய அமெரிக்க வெள்ளையருமே உதாரணங்களாகக் கொள்ளப்பட்டது. இதற்கு கல்வியில் சமவாய்ப்பின்மை, வாழும்முறை, வாழ்க்கைத் தரம், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் என்பன காரணங்கள் என்பதனை மறந்துவிடக் கூடாது.

## இனக்கலப்பு

நவீன உலகில் மக்கள் ஒன்றுகூடி வாழ்வதனுல், பெருமளவு இனக்கலப்பு ஏற்பட்டுள்ளது. நவீன போக்குவரத்துச் சாதனங்கள், பொருளாதார நடவடிக்கைகள், குடியேற்றப் பண்பு என்பனவற்ருல் பல இனங்கள் ஒன்றுகூடி வாழ நேரிடுவதால் அவர்களிடையே மணவினைகள் இயல்பாக நடைபெறுகின்றன. இவர்களின் சந்ததிகள் புதிய தோற்றம் கொண்டு விளங்குகின்றனர். கீழைத்தேசங்களில் வெள்ளையரின் கலப்புத் தோன்றியுள்ளது. ஆபிரிக்கருடன் வெள்ளையர் இணைந்துள்ளனர். இதனுல் தோன்றிய மனிதவினத்தை ஒரு தனிப்பிரிவில் அடக்கலாமா? கலப்பினத்தில் உருவாகும் பிள்ளைகள் மிகுந்த ஆரோக்கியம், புத்திக்கூர்மை கொண்டவர்களாக இருப்பார்கள் எனவும் கருதப்படுகிறது. இந்த அடிப்படையில் இவர்கள் வெள்ளையரைவிட மேலானவரா?

உடற்கூற்று அடிப்படையில் ஏற்படும் வேறுபாடுகள் பெரும்பாலும் இரு தன்மைகளால் ஏற்படுகின்றன. ஒன்று பரம்பரை பரம்பரையாக பெற்ருேரிடமிருந்து (Heriditary) பெறும் இயல்புகள்; மற்றது சூழலினுல் மாற்றமுறும் உறுப்புகள். எனினும் 'ஜெனெட்டிக்ஸ்' என்று கூறப்படும் அறிவியற்கருத்துக்கள் வளர்ச்சியடைந்ததால், இனக் கலப்பினுலும் புதிய இனம் தோன்றுவதில்லை என்றும், உயிரணுக்கள் கொண்டுள்ள பாரம்பரிய இயல்புகள் மாறுவதில்லை என்றும் கருதப்படுகிறது. இதனை மெண்டல் சுவாமியாரின் ஆராய்ச்சி வற்புறுத்தியது. எனினும் 'ஜீன்ஸ்' என்னும் உயிரணுவில் சிற்சில காலங்களில் எதிர்பாராத வண்ணம் திடீர் மாற்றம் (Mutation) ஏற்படுவதால்தான் வெள்ளையினத்தில் கறுத்த நிறத்தவரும், கறுத்த இனத்தில் வெள்ளை நிறத்தவரும் உருவாகின்றனர் எனக் கருத்து நிலைநாட்டப்பட்டது.

எனவே, 'இப்போதுள்ள மனிதவகைகள் யாவும் மனித இயல்புகளைப் பெற்றிருந்த ஒரு வகைப் பூர்வீக மனிதரிலிருந்தே வந்தவை. உலகில் இங்குமங்குமாக நகருங்கால் கூர்தல் முறையாக



அப்பூர்வீக மனித வகையினரிலிருந்து தோன்றியவர்களே இப்பொழுதுள்ள மனிதவகையினர்.' 'பூர்வ மனிதனைப் பற்றி இதுவரை எதுவும் தெரியாதிருப்பதனுல் மனிதரை 'இனங்கள்' எனும் தொகுதிகளாக வகைப்படுத்தியும், உட்பிரிவுகளாகப் பிரித்தும் ஆராய்வது இயற்கையே.' 'மனித இனங்கள் பெயர்ந்து செல்லும் ஆற்றல் காரணமாக உலகமெங்கும் பரந்தும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தும் கலந்தும் பின்னிப்பிணைந்து விடுகின்றன.' என்ற எச். ஜே. புளுவர் கருத்துக்களைக் கொண்டுபார்க்குமிடத்து, மனித இனங்கள் யாவும், ஹோமோசபியன்ஸ் என்று வழங்கப்படும் ஆதிப்பூர்வ குடியிலிருந்து உருவாகி, உலகில் நகருங்கால் ஏற்பட்ட கூர்தல் முறையால் மாற்றமுற்றவர்கள் என்று கருத வேண்டியுள்ளது. உலகில் மனித இனம் ஒன்றே ஒன்று மட்டுமே ஆகும்.

## இனபேதங்களுக்கான காரணங்கள்

கடந்த ஐந்து நூற்ருண்டுகளாக ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய உலகின் பெரும் நிலப்பரப்புகளை ஐரோப்பியர் ஆக்கிரமித்து தமது பொருளாதாரச் சுரண்டலை நடாத்தி வந்தனர், இதற்குத் தாங்கள் மேலான இனத்தவர் (Racial-Superiors) என்றும், விசேட தன்மை கொண்டவர் என்றும் தம்மைக் காட்டிக் கொண்டனர். ஆயுதம் மூலமே இவ்வுணர்வை உறுதிப்படுத்திக் கொண்டனர். இன்றைய செல்வமிக்க நாடுகளின் அபிவிருத்தி வரலாற்று ரீதியாக, வறுமையாக இன்று விளங்கும் மூன்ருவது உலக நாடுகளைச் சுரண்டியதால் ஏற்பட்டதாகும்.

ஐரோப்பியரின் வெள்ளை இனக் கோட்பாடு, குடியேற்றவாதம், ஏகாதிபத்தியம் என்பவற்றுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தது. வெள்ளையர் தமது இனவாத உணர்ச்சித் தத்துவத்தையே பிரதான ஆயுதமாகக் கொண்டனர். அதாவது வெள்ளையர் நாகரிகமானவர்; ஆட்சி செலுத்தும் வல்லமை கொண்டவர்கள்; இராணுவ படைபலம் கொண்டவர்கள் எனவும், வெள்ளையரல்லாதவர் நாகரிகமற்றவர், அறிவிலிகள், ஆற்றலற்றவர்கள் எனவும் பிரச்சாரம் செய்து கொண்டனர்.

20-ம் நூற்ருண்டின் ஆரம்பகட்டத்தில் ஐரோப்பியர் வசமே ஆபிரிக்கா, ஆசியாவின் மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, தூர கிழக்கு நாடுகள், இலத்தீன் அமெரிக்க நாடுகள் இருந்தன. ஆபிரிக்காவை 1919-இல் ஐரோப்பியர் தமது குடியேற்றங்களாக

மாற்றியமைக்கப் பயன்படுத்தியது இனத்தையே. இதன் முக்கியத்துவத்தை பின்வரும் அட்டவணை விளக்கும்.

### 1919-ல் ஆபிரிக்காவில், ஐரோப்பிய குடியேற்றங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரான்ஸ் | — | அல்ஜீரியா, ரியூனிசியா, மொரோக்கோ பிரான்சின் மேற்காபிரிக்கா, பிரான்சின் மத்தியகோட்டு ஆபிரிக்கா, சோமாலிலாந்து, தோகோலாந்து, கமரூன், மடகாஸ்கர். |
| 2. | பெல்ஜியம் | — | கொங்கோ |
| 3. | போத்துக்கல் | — | கினியா, அங்கோலா, மொசாம்பிக், கபின்டா |
| 4. | ஸ்பெயின் | — | ரியோடி ஓரோ, ரியோமுனி, ஸ்பானிய கினியா |
| 5. | இத்தாலி | — | எனரத்திரியா, இத்தாலிய சோமாலிலாந்து |
| 6. | பிரித்தானியா | — | காம்பியா, சியராலியோன், கானா, நைஜீரியா, தென்மேற்காபிரிக்கா, பெச்சுவானாலாந்து, சுவாசிலாந்து, பசுத்தோலாந்து, தென்ரொடீசியா, வடரொடீசியா, நியூசிலாந்து, தங்கனிக்கா, சான்சிபார், உகண்டா, கென்யா, சோமாலிலாந்து, சூடான், எகிப்து |

ஆரம்பகாலங்களில் ஐரோப்பியர், தமது சொந்த 'இலாபம் கருதி இன பேதங்களை வளர்த்தனர். தமது வெள்ளையினவாதத்தை அற்ப இனவாதம் என செயற்படுத்திக் கொண்டனர்.

அற்ப இனவாதம் என்பது தென்னாபிரிக்கா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் உள்ள பொதுமன்றங்களில் வெள்ளையரல்லாதோரை நுழையவிடாது தடுத்தமையாகும். சீனாவின் விடுதலை காலத்திற்கு முன்னர் 'சங்காய்பார்க்' பொதுத் திடலில் 'நாய்களும் சீனர்களும் இங்கு நுழையத்தடை' என்று விளம்பரமிட்டிருந்தனர். இலங்கையிலும் ஆங்கிலேயராட்சியிலிருந்த தேசாதிபதி பாண்ஸ் 'கறுப்பு முகங்களும், வெள்ளையர்களும் ஒரு சமுதாயத்தில் ஒன்றாக என்றுமே சம அந்தஸ்தில் கலக்க முடியாது' என்று கூறியிருந்தார். ஆகவே, ஆரம்பகாலங்களிலி



ருந்து இனபேதங்களினடியாகவே ஏகாதிபத்தியங்களும் வளர்ச்சி பெற்றன எனலாம். ஆனால் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இவ்வாறு அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகளில் விடுதலை வேட்கை, சமதர்மப் பொருளாதாரப் போராட்டங்கள், நியாயங்களுக்காக இரத்தம் சிந்துதல் போன்ற உணர்வுகள் தோன்றி பல நாடுகள் விடுதலை பெற்றன. 1909-இல் தென்னாபிரிக்கா, 1922-ல் எகிப்து, 1957-ல் லிபியா, 1956-ல் ரியூனிசியா, மொரோக்கோ, சூடான், 1957-இல் கானா, 1958-ல் கினியா, 1960-ல் நொரெட்டானியா, மாலி, செனகல், தோகோ, தகோமி, தந்தக்கரை, மேல்வோல்டா, நைகர், நைஜீரியா, சாட், சோமாலி, கமரூன், மத்திய ஆபிரிக்கக் குடியரசு, கபொன் கொங்கோ, பிரெஸவில், மலகாசி, 1961-ல் சியராலியோன், தான்சானியா, 1962-ல் ருவண்டா, உகண்டா, புருண்டி, அல்ஜீரியா, 1964-ல் சாம்பியா, மாலவி, 1965-ல் காம்பியா, ரொடீசியா, 1967-ல் லெசோதோ, பெட்சுவானா, சுவாஸிலாந்து, 1969-ல் இப்னி போன்ற ஆபிரிக்க நாடுகள் நீண்டகால விடுதலைப் போராட்டங்களினாலும் ஏராளமான உயிர்ச் சேதங்களாலும் இன்று ஐரோப்பிய நாடுகளிலிருந்து சிறப்பாக பிரான்சு, பெல்ஜியம், போத்துக்கல், ஸ்பெயின், இத்தாலி, பிரித்தானிய நாடுகளிலிருந்து விடுதலை பெற்றாலும் நீண்டகாலமாக தம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த நாடுகள் மீது இன்றைய சந்ததியினர் மாறாத பழிவாங்கும் உணர்வு கொண்டுள்ளனர். இதனால் கறுப்பே அழகு என்ற நிறவாத இனவுணர்வு கறுப்பர்களிடையே எழுந்துள்ளது. இது அன்று வெள்ளையர் ஏற்படுத்திய 'இனவாத உணர்ச்சித் தத்துவத்தை' மதித்து எழும் இனவாத உணர்ச்சியாகும். அதுமட்டுமன்றி இன்றைய தங்கள் பொருளாதார கலாச்சார வரட்சிக்கு இந்த அன்னியரின் பயங்கரச் சுரண்டலே காரணம் என்று கருதுவதால் இனவாத உணர்வுகள் வளர்ந்துள்ளன.

ஐரோப்பியர் தமது குடியேற்ற நாடுகளை விட்டு வெளியேறிய காலத்தில் அந்நாடுகளில் இனவுணர்வுகளை, மொழி, மதம், கலாச்சார அடிப்படைகளில் கொழுந்துவிட்டெரியச் செய்து வெளியேறினர். இதற்கு அவர்கள் கூறிய காரணங்கள் சிறுபான்மையினத்தவரின் நலனைப் பாதுகாப்பதே என்பதாகும். இந்தியா, பாகிஸ்தான் என அவர்கள் இந்து முஸ்லிம் அடிப்படையில் பிரித்துச் சென்றமை 1971-ல் வங்காளம் பேசும் முஸ்லிம், உருது பேசும் முஸ்லிம் என வகைப்படுத்தப்பட்டு, வங்காளதேசம்,

பாகிஸ்தான் என இது மேலும் இரு தேசமாகியது. அமெரிக்கர் வியட்னாமை, வட வியட்னாம், தென் வியட்னாம் எனப் பிரித்தமையும் குறிப்பிடப்பட்டது. இதுமட்டுமன்றி இன்று வட இந்தியாவில் நாகலாந்து மேகலயா போன்ற பூர்வகுடிகள் வாழும் நாடுகள் (பிரிவுகள்) இன அடிப்படையில் கிளர்ச்சி செய்து இந்தியாவின் தேசிய ஒற்றுமையைக் குலைத்து வருகின்றன. இவை யாவும் இன பேதங்களை மேலும் வளர்க்கின்ற காரணிகளாகும்.

நவகுடியேற்றவாதமும் இனபேதங்களை வளர்க்க உறுதுணை புரிகின்றன எனலாம். அதாவது வளர்ச்சியடைந்த முன்னேற்ற நாடுகள் தமது ஆட்சி, அரசு நிர்வாகம் என்பவற்றைத் தமது 'பல்தேசிய கம்பனிகள் மூலம் தனியார் அரசு மூலதனமிடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மூன்றாவது உலகநாடுகளைச் சுரண்டுகின்றன. இலங்கை, இந்தியா, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, ஆபிரிக்க நாடுகள் போன்ற வளர்முக நாடுகளுள்ளிட்ட நாடுகளை இன்றும் பாதிக்கின்றன. உதாரணமாக இந்தோனேஷியாவின் எண்ணெய் உற்பத்தியில் கல்டெக்ஸ் கம்பனியின் அக்கறை, இலங்கை இந்தியாவில் இரசாயனக் கைத்தொழிலில் இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்றீஸ் கம்பனியின் ஆதிக்கம், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கணணித் தொழிலில் ஐ. பி. எம். கம்பனியின்பிடி, ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிய நாடுகளில் தொடர்பு வைத்துள்ள கம்பனிகளான யூனிலிவர் பிட்டன், புரூக்பொண்ட், கட்பரீஸ், டிரெபர், ஏ. பி. சி. மனுபக்ஷரிங் கம்பனி, பியட்ஸ், பெப்ஸி கம்பனி, ஜெனரல் எலெக்ரிக் கம்பனி, சிங்கர் தையல் மெசின் கம்பனி, பி. எம். ஸி பென்ஸ் அன்ட் யு. எஸ். எலெக்ரோனிக் நிறுவனங்கள், ஜேர்மன் ரொய்ஸ் மனுபக்ஷரிங் கம்பனிகள், டெபோடாஸ் மிச்சுபிசி போன்றன, நாடுகளில் முக்கிய துறைகளில் முதலீடு மூலதனத்தில் ஆதிக்கம் செலுத்தியது மாத்திரமன்றி இலாபங்களையும் மூலதனங்களையும் கடத்தினவே ஒழிய, அந்தந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைப் புறக்கணித்தன. இவை பல்வேறு நாட்டுத் தேசிய இனங்கள் பிற நாட்டினத்தவரை வெறுக்க ஏதுவாயிற்று. எனினும் முதலீட்டு நாடுகள் தங்களைப் பாரம்பரியமாகச் சார்ந்திருக்கும் நாடுகளிடையே முதலீடு செய்து வருகின்றன. உதாரணமாக அமெரிக்கா, கரிபியன் பிரதேசத்திலும் இலத்தீன் அமெரிக்காவிலும் ஜப்பானியர் ஆசியாவிலும் பிறெஞ்சுக்காரர் ஆபிரிக்காவிலும் முதலீடு செய்து வருகின்றனர். இவற்றினைப் பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் என்று அழைப்பர். இத்தாபனங்கள் தாபன அழைப்பு தொழினுட்பவியல், பணம், இலட்சிய வாதம் ஆகிய



வற்றுடன் உலகை ஓர் ஒன்றிணைக்கப்பட்ட அலகாக நிர்வகிப்பதன் மூலம் நம்பத்தக்க முயற்சியை வரலாற்றிலேயே முதலாவதாக மேற்கொண்டவையாகும். தென்னாபிரிக்காவில் வெளிநாட்டு மூலதனம் 300 கோடி டொலர் ஆகும். எனவே இத்தாபன அமைப்புக்கள் இன பேதங்களை எந்தளவிற்கு தூண்டிவிடும் என்பது நன்கு புரிந்ததே.

ஐரோப்பிய அடிமை வர்த்தகர்கள் ஆபிரிக்கர்களை அடிமையாகக் கொள்வனவு செய்து மேற்கிந்திய தோட்டங்களில் விற்பனை செய்தனர். இவர்களில் பலர் கடற்பயணப் பாதைகளில் இறந்தழிந்தனர். தப்பியோட முயன்றபோது சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர். இதனால் ஆபிரிக்க கறுப்பு இனத்தின் குடிப்பெருக்கம் 1650-இல் நிலவிய அளவே 1850லும் காணப்பட்டது கொங்கோவில் பெல்சியத்தின் தாக்கத்தால் ஒரு கோடி ஆபிரிக்கர் இறந்தனர். இவை யாவும் இன்றைய ஆபிரிக்க இளைஞர் மனதில் இனத் துவேசத்தை வளர்த்துள்ளன. அதுமட்டுமின்றி தமது கலாச்சாரத்தை சிதைத்தவரும் வெள்ளையரே என்ற எண்ணமும் வேரோடியுள்ளது. (ஐரோப்பியர்கள் முதன் முதலாக ஆபிரிக்காவுக்கு வந்தபோது அவர்கள் கைகளில் பைபிள்களும் எங்களிடம் நிலங்களும் இருந்தன. இன்று எங்கள் கைகளில் பைபிள்களும் அவர்களிடம் எங்கள் நிலங்களும் உள்ளன.) என்று கருதும் இளைஞர்கள் வெள்ளையின வேறுபாடுகளை மேலும் வளர்க்கின்றனர்.

1916-ல் அராபியர் தம்மை ஒட்டோமான் அல்லது உதுமான் சாம்ராஜ்யத்திலிருந்து விடுவிக்க ஆங்கிலேயர், ரூஷியர், பிரான்சியருடன் சேர்ந்து போரிட்டனர். உதுமான் வெற்றிகண்ட பின்னர் இம்மூன்று வல்லரசுகளும் தங்களிடையே உதுமான் சாம்ராஜ்யத்தை பங்கு போட்டனவே ஒழிய அராபியரைக் கவனிக்கவில்லை. எனவே அராபியர் ஒன்றுகூடி இரண்டாம் உலக யுத்தத்தின் பின் தொடர்ந்து போராடி ஒன்றன்பின் ஒன்றாக 1952-ல் எகிப்தில் ஆரம்பித்து பின்னர் ஈராக், சிரியா, சூடான், ஜேர்மன், லிபியா எனச் சுதந்திரம் பெறலாயினர். இந் நாடுகள் ஐரோப்பியர் தங்கட்குச் செய்ததை மறக்க முயவில்லை. இவையும் காணாது என்று அராபியரால்; தமது நம்பிக்கைக்கு உரிய நாடாக கருதப்பட்ட அமெரிக்கா அராபியரின் மத, கலாச்சார எதிரியான யூதர்களை பாலஸ்தீனத்தில் கொண்டுவந்து இஸ்ரவேல் என்னும் நாட்டை உருவாக்க அங்கீகாரம் அளித்தமையும் அராபியரால் மறக்க முடியவில்லை, எனவே மத்திய கிழக்கில் யூதர், அராபியர், அமெரிக்கர், ஐரோப்பியர், ஆபிரிக்கர் என அரசியலடிப்படையில் இனப் போராட்டங்கள் இன்றுவரை நிகழ்ந்து வருகின்றன.

இன்றைய கனிப்பொருணெய் விலையுயர்வுக்கும் ஒபெக்தாபன (Opec) அமைப்பும் இந்த இனவாத போராட்டங்களின் விளைவே யாகும். யூதர்கள் அராபியர் போராட்டம் அறுபது எழுபது ஆண்டுகளில் உலகையே உலுக்கின. எகிப்திய ஜனாதிபதி சதாத் இஸ்ரேலிய பிரதமர் பெகின் என்போரின் முயற்சியால் சமீப காலமாக யூதர் அராபியரிடையே ஓரளவு அமைதி நிலவி வருகிறது.

அடிமை வர்த்தகத்தால் வளர்ச்சி பெற்ற நாடுகட்கு கொண்டு செல்லப்பட்ட 'கறுப்பர்' இன்று அந்த நாடுகளில் இனபேத வளர்ச்சிக்கு காரணங்களாகியுள்ளனர். அதுமட்டுமின்றி இன்றும் தென்னாபிரிக்கா, நம்மிபியா, ஸிம்பாவே, இஸ்ரவேல் ஆகிய நாடுகளில் இனவாதக் கொள்கை தொடருவதைக் காணமுடியும். சுதந்திர நாடுகளில் கூட கல்வித் திட்டம். கல்விக் கோட்பாடுகள் அரசாங்க வேலை வாய்ப்புக்கள் என்பனவற்றில் காட்டப்படும் போக்குகளின் பிரதான அம்சமாக இனம் அமைந்துள்ளது.

எனவே தான் ஏகாதிபத்தியவாதமும் இனவாதப் பிரச்சினைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. என்பது மட்டுமன்றி இப்பிரச்சினை வேறுபாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அனைத்திலும் வெவ்வேறு வடிவத்தில் இன்றும் செயல்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

4348
C-C

119460

அறிவியல்,
சமூகவியல்
உண்மைகளை
யாவரும் புரிந்து
கொள்வதற்கு
உதவும் சிறு நூல்.